
விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 006 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 10 ஞாயிற்றுக்கிழமை (25.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சமூகப் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் முன்வருவோம்



### நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

இருளை நீக்கி மனிதர்களிடத்தே சுபீட்சத்தை ஏற்படுத்தும் உண்மையான ஒளியின் வருகையையே நத்தார் பண்டிகை குறிக்கின்றது.

ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோருக்கு விடுதலையைப் பெற்றுக் 19

## கடவுள் எம்முடன் உள்ளார் என்பதை நத்தார் உணர்த்துகிறது

### கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியில் யாழ்.ஆயர்



(யாழ்ப்பாணம்)

கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை சிறப்பாக உணர்த்தும் காலம் கிறிஸ்து பிறப்பு பெருவிழாக் காலமாகும் என யாழ்.ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார். 19

நத்தாரை முன்னிட்டு

## 309 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளிலுள்ள 309 கைதிகளுக்கு விசேட பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

நத்தார் விசேட பொதுமன்னிப்பின் அடிப்படையில் இந்த 309 பேரும் இன்று விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் 19

சமகால நிலைமை தொடர்பில்

# தமிழ்க் கட்சிகள் நேற்று ஒன்றுகூடி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சமகால நிலைமை தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.**

நல்லூரிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ் வரனின் இல்லத்தில் மாலை வேளை ஒன்றுகூடிய தமிழ் கட்சிகளின் தலைவர்கள் இரண்டு மணிநேரம் வரை சந்திப்பில் ஈடுபட்டனர்.

குறித்த சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சி 19

## நீரிழப்பு ஏற்பட்டு 8 மாத சிசு பலி

(கரணவாய்)

வயிற்றோட்டம் ஏற்பட்ட குழந்தையை கால தாமதமாக வைத்தியசாலையில் அனுமதித்ததால் நீரிழப்பு ஏற்பட்டு குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை அராலி வீதி, வசந்தபுரம், நாவாந்துறையைச் 19

பளை பேருந்து விபத்தில்

## படுகாயமடைந்த சிறுவனின் ஒரு கை அகற்றப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பளை முல்லையடி பகுதியில் டிசம்பர் 21ஆம் திகதி இடம்பெற்ற பஸ் விபத்தில்படுகாயமடைந்த ஆறு வயதுச் சிறுவனின் ஒரு கை அகற்றப்பட்டுள்ளது.

வீதியில் பந்தய ஓட்டம் ஓடிய இ.போ.ச சாரதியால் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இ.போ.ச பேருந்து கவிழ்ந்து கடந்த 21ஆம் திகதி மாலை விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் முல்லைத்தீவு கல்வி 19



வாசகர்கள், விளம்பரதாரர்கள், வர்த்தகர்கள் அனைவருக்கும் வலம்புரியின்
**கிறிஸ்துமஸ்**
தின வாழ்த்துக்கள்

ஜனவரி 5க்கு முன்

## வேட்பு மனுத் தாக்கல் தொடர்பில் அறிவிக்கப்படும் தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு அறிவிப்பை ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் காலை 19

## மக்கள் வங்கியால் மோசடி செய்யப்பட்ட நகைகளை மீளத் தராவிட்டால் போராட்டம்

### பாதிக்கப்பட்ட மக்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட சுமார் 200க்கு மேற்பட்ட பொது மக்களின் நகைகள் அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களால் மோசடி செய்யப்பட்ட நிலையில் அதனை எமக்கு மீளப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

நேற்று சனிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் 20

## மதில் இடிந்து விழுந்ததில் இளைஞன் உயிரிழப்பு

(கரணவாய்)

மதிலில் ஏறி நின்ற இளைஞர் ஒருவர் அம்மதில் இடிந்து விழுந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை செம்மண்பிட்டி, இலட்சுமணன் தோட்டம், தும்பளையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் விக்னராஜா கிருஷ்ணன் (வயது-32) என்பவரே உயிரிழந்தவராவார்.

வீட்டின் மதில் சுவரில் ஏறி நின்றபோது மதில் இடிந்து விழுந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதில் தலையில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார 19

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# வன்முறைகள் தொடர்பான விசாரணை அறிக்கையை விரைவில் சமர்ப்பியுங்கள்

## பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

வன்முறைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 107 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் நாட்டில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசாரணை ஆணைக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கர்ணகொட, அதன் தலைவர் மற்றும் முன்னாள் விமானப் படையின் முன்னாள் மார்ஷல் ரொஷான் குணதிலக்க மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க ஆகிய மூவரடங்கிய குழு இங்கு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்திற்கு முன்பாக போராட்டம், பாராளுமன்ற உறுப்பினர் கொலை, பல பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு சேதம், ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் செயற்பாட்டாளர்களால் கையகப்படுத்தியமை, தற்போதைய ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லம் எரிப்பு என்பன விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரி ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 107 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அனுப்பிய கடிதத்தில், இந்த விசாரணையின் போது பொலிஸ் மற்றும் இராணுவ . பிரிவுகள் அனைத்து வன்முறைகளையும் கட்டுப்படுத்த தவறியதாகவும், பல சந்தர்ப்பங்களில் இராணுவம் மற்றும் பொலிஸ்மா அதிபர்கள் அறிவுறுத்தல்களை வழங்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்முறையைத் தடுக்க கீழ்நிலை அதிகாரிகள், அதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வேண்டுமென்றே தங்கள் பொறுப்புகளைப் புறக்கணித்துள்ளனர் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4.7)

# இன்று மதுபான கடைகளுக்கு பூட்டு

நாடளாவிய ரீதியிலுள்ள சகல மதுபானசாலைகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு இன்றைய தினம் மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் சுற்றுலாத்துறைசார் சேவைகளை வழங்கும் ஹோட்டல்களில் மாத்திரம் மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பிற்கு முரணாக சட்ட விரோதமாக மதுபான் விற்பனையில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4.7)


நாகபூஷணி திருமண சேவை

அனைவருக்கும் இலவசம்

(25.12.2022 - 31.12.2022)

பல்லாயிரக் கணக்கான வரன்கள் எம்மிடம் உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.
264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
(11599)
021 222 9306, 077 138 7596

பணியாளர் தேவை


விமான பயணச்சீட்டு மற்றும் விசா ஆலோசனை நிறுவனத்தில் பணிபுரிய கணனி அறிவுடைய பெண்கள் தேவை. சுயவிபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.
காலம் - 26.12.2022 காலை 10.00-2.00 மணிவரை
இடம் - Hybrid International Hub (pvt) LTD
இல.36 வைத்திலிங்கம் துரைசாமி வீதி, (LIC கட்டடம், வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) யாழ்ப்பாணம்.
(C-5653)
076 250 0089, 021 222 1265

சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடாவுக்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
Hybrid International Hub (pvt) LTD
076 250 0098
021 222 1265
(C-5653)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127


## மரண அறிவித்தல்



தோற்றம்
19 – 09 – 1939

மறைவு
24 – 12 – 2022

## முத்துராஜா சின்னமணி

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, பாரதி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராஜா சின்னமணி அவர்கள் நேற்று (24.12.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சுவாகி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற முத்துராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பூமணி, கந்தசாமி மற்றும் இராசமணி, சிவபாதம், சற்குணம், வீரசிங்கம், ராஜதுரை, மனோன்மணி, ஆனந்தராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற பாஸ்கரலிங்கம்(பிரான்ஸ்) மற்றும் கணேஸ்வரி (இலங்கை), சதானந்தம்(சுவிஸ்), சிவராஜா(கனடா), சண்முகலிங்கம்(சுவிஸ்), சிவலிங்கம்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-5656)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.11.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

## சிவலிங்கம் இராசலட்சுமியம்மா

(வட்டூர் வீயோடை இலுப்பையடி முத்துமாரி அம்பாள் ஆலய மூத்த அறங்காவலர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.12.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: 2024 பங்குனி உத்திரதேர் திருவிழாவின்போது தந்தை, தாயார் நினைவாக கல்வி ஊக்குவிப்பு நிகழ்வினை நடைமுறைப்படுத்த உள்ளனர்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

(C-5655)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான திகதி அறிவிக்காவிட்டால் நீதிமன்றத்தை நாட வேண்டி வரும்

## பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் அரசுக்கு எச்சரிக்கை

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்துக்குள் உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு தெளிவானதொரு அறிவிப்பை விடுக்காவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.**



உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறும் திகதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் இருப்பது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தவேண்டிய தேவை சட்ட ரீதியில் வெளிப்பட்டு இருக்கின்றது. ஆனாலும் இந்தத் தேர்தலை பிற்போடுவதற்காக பல்வேறு திட்டங்கள், நடவடிக்கைகள் தற்போது வரைக்கும் கையாளப்பட்டு வருகின்றன.

எந்த நிலைமையிலும் சரி தேர்தலை நடத்தியாக வேண்டி இருக்கின்றது. இது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நேரடி தீர்வாக இல்லாவிட்டாலும் ஜனநாயக வரைப்புக்குள் உரிய காலத்துக்கு சட்ட ரீதியில் தேர்தலை நடத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

அத்துடன் சட்டத்தின் பிரகாரம் 2023 மார்ச் 19 ஆம் திகதிக்கு முன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு, நியமிக்கப்படவேண்டும். அதனால் அடுத்த வருடம் ஜனவரி முதல் வாரத்துக்குள் உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெறும் திகதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு தெளிவானதொரு அறிவிப்பை விடுக்காவிட்டால் அது தொடர்பில் நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் உதவி தெரிவத்தாட்சி அதிகாரிகளை நியமிப்பது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டிருக்கின்றது.

அத்துடன் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக கலந்துரையாட அனைத்து மாவட்ட செயலாளர்களையும் நேற்று முன்தினம் கொழும்புக்கு அழைத்திருப்பதாக தகவல்கள் தெரிய வருகின்றன. (க-7)

## தேர்தலுக்கு தயார் வாக்குப்பெட்டிகள் திருத்தும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

பழுதடைந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மர வாக்குப் பெட்டிகள் பழுதுபார்ப்பதற்காக அரசாங்கத் தொழிற்சாலையில் அண்மையில் ஒப்படைக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலை மிக விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதால், அனைத்து வாக்குப்பெட்டிகளையும் தயார் நிலையில் வைக்க ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதேவேளை, தேர்தலின் போது வாக்காளர்களின் விரல்களுக்கு வர்ணம் பூசுவதற்கு பயன்படுத்தப்படும் பெயிண்ட் மற்றும் இதர பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பிலும் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-7)

## நாட்டில் நிலவும் காலநிலை மாற்றத்தினால் சுவாச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

### முக்கவசம் அணிய வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய தொற்று நோயியல் சிகிச்சை பிரிவுக்கு பிரவேசிக்கும் சுவாச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றமே சுவாச தொற்று நோய்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் பலருக்கு காய்ச்சல் மற்றும் இருமல் காணப்படுவதாகவும் உரிய வழிகாட்டுதல்களை பின்பற்றா விட்டால், இது ஒருவரிடம் இருந்து மற்றையவருக்கு தொற்றும் அபாயம் உண்டெனத் தெரிவித்த அவர் இதன் காரணமாக சளி, இருமல் மற்றும் தும்மல் என்பன காணப்பட்டால் முகக் கவசம் அணியுமாறு பொது மக் களை கோருவதாகவும் தெரிவித் தார்.

எனவே, தொற்று நோய்களில் இருந்து தம்மை பாதுகாத்துகொள்வதற்கான வழிகாட்டுதல்களை மக்கள் உரிய வகையில் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்படுவதுடன் நாட்டில் ஏற்பட்டுள்ள குளிர் நிறைந்த காலநிலையைக் கருத்தில் கொண்டு மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-7)







இலங்கையின் உச்சி என அழைக்கப்படும் "பனைமுனை கல்வெட்டு திறப்பு விழா" பருத்தித்துறை -பனைமுனை பகுதியில் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பனைமுனை கல்வெட்டினை திறந்து வைத்தார்.

## வீதியில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட்ட, பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடந்த 22 ஆம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போது வீதியில் பணப்பை ஒன்று இருப்பதனை அவதானித்தனர்.

குறித்த பையில் 35 ஆயிரம் ரூபாய் பணம், தங்க ஆபரணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன காணப்பட்டன.

அந்தப் பணப்பை ஊர்காவற்றுறைப் பகுதியில் வசிக்கும் கிறிஸ்தவ மதகுரு ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டது.

உடனடியாக அவரிடம் குறித்த பணப்பை கையளிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை பொலிஸாரின் முன்மாதிரியான செயற்பாட்டை அனைவரும் பாராட்டி வருகின்றனர். (க-7)

## உர இறக்குமதிக்கு அனுமதி விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

இரசாயன உர இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளதாக பொருளாதார உறுதிப்பாடு, தேசிய கொள்கைகள் மற்றும் நிதியமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கையெழுத்திடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, விவசாய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் கீழ் க்ளைபொசேட், யூரியா, அமோனியா, சல்பேட், பொட்டாசியம்க்குளோரையிட், பொட்டாசியம் நைட்ரேட் உள்ளிட்ட இரசாயன உரங்களை திறந்த கணக்கின் ஊடாக நாட்டிற்கு இறக்குமதி செய்ய முடியும். (க-7)

## எமக்குப் பணம் வேண்டாம் காணாமல் போன உறவுகளே வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொடுப்பதாகக் கூறிய சர்ச்சை தொடர்பிலும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் தொடர்பான சர்ச்சை தொடர்பிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் கிளிநொச்சி மாவட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் இணைப்பாளர் கதிர்காமநாதன் கோகிலவாணி கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,எங்களின் உறவுகளை நாங்கள் 13 வருடங்களாக தேடி அலைந்து கொண்டிருக்கின்ற வேளையில், எமது உறவுகள் எவரும் உயிருடன் இல்லை என்றும்,அவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் இழப்பீடு கொடுப்பதாகவும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருக்கின்றார்..

எங்களுக்கு அந்த இரண்டு இலட்சம் ரூபாய் இழப்பீடு தேவையில்லை என்பதை தெளிவாகத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

எமக்குப் பணம் தேவையில்லை, காணாமல் போன உறவுகள் தான் தேவை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் அமைப்பு ஒன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளை எடுத்து அந்த பதிவுகளை ஜெனிவாவுக்கு கொண்டு செல்வதாகக் கூறி தகவல்களை திரட்டுகின்றார்கள்.

ஆனால் அது உண்மையானது அல்ல. உறவுகளே புலரிடமும் ஏமாற வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா பிறிமியர் லீக் ஜப்னா கிங்ஸ் சம்பியன்

2022ஆம் ஆண்டுக்கான லங்கா பிறிமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணியை 2 விக்கெட்டுக்களால் வீழ்த்திய ஜப்னா கிங்ஸ் அணி தொடர்ந்தும் 3ஆவது தடவையாகவும் கிண்ணம் வென்றுள்ளது.



கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த நிலையில் 164 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பாடிய ஜப்னா கிங்ஸ் 19.2 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து போட்டியின் வெற்றியிலக்கை அடைந்தது.

ஜப்னா கிங்ஸ் சார்பில் துடுப்பாட்டத்தில் அவிஸ்க பெர்ணான்டோ 50 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார்.

பந்துவீச்சில் சுரங்க லக்மால் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த நிலையில் போட்டியின் சிறப்பாட்டக்காரராக அவிஷ்க பெர்ணான்டோவும், தொடரின் சிறப்பாட்டக்காரராக சதீர சமரவிக்ரமவும் தெரிவாகினர்.

சிறந்த வளர்ந்து வரும் வீரராக் யாழ்.வீரர் விஜாஸ்காந் தெரிவானார்.

வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணிக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டி ஈட்டி எறிதலில் மன்னார் மாணவிக்கு வெள்ளி




இலங்கை தடகள சபையினால் நடத்தப்படும் வருடாந்த தடகள சம்பியன்சிப் 2022 தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது.

இதில் மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி ஜதுசிகா, 16 வயது பெண்கள் பிரிவில் ஈட்டி எறிதலில் 35.97 மீற்றர் தூரம் எறிந்து இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (க-7)

# மார்கழி மாத இராசி பலன்கள் 16.12.2022-14.01.2023

## தனுசு

**சந்தர்ப்பங்களை உபயோகப்படுத்திக் கொண்டு சாதிக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு சுக ஸ்தானத்தில் பலம் பெற்றிருக்கிறார். தனாதிபதியான சனி தன ஸ்தானத்தில் வலிமையுடன் இருக்கிறார். எனவே இந்த மாதம் இனிய மாதமாக அமையும்.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மார்கழி 3 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வாழ்க்கைத்துணை வழியேயும் வாரிசுகளாலும் பிரச்சினைகள் உருவாகும். தீர்க்கமான முடிவெடுக்க முடியாமல் திணறுவீர்கள். திடீர் திருப்பங்கள் பலவும் வந்து சேரும். வாசல் தேடி வந்த வரன்கள் திரும்பிச் செல்லலாம். வழிபாட்டில் கூட கவனச் சிதறல் அதிகரிக்கும். தொழிலில் நண்பர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலை உண்டு.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். 11 இற்கு அதிபதி 2 இல் வரும் இந்த நேரம் பெரியளவில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். உங்கள் தொழில் வெற்றிநடை போடும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். 6 இற்கு அதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால், பெயரளவில் விரயங்களும் ஏற்படும். அதை சுபவிரயங்களாக மாற்றிக்கொள்வது நல்லது. பணிபுரிபவர்களுக்கு சம்பள உயர்வு, பதவி உயர்வு காரணமாக குடும்பத்தை விட்டு பிரிந்து சென்று, நீண்ட தூரங்களில் பணிபுரிய வேண்டியதிருக்கும். வெளிநாட்டு முயற்சி அனுகூலம் தரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். தொழில் வணிகம் சார்ந்த முயற்சிகளுக்கு மாற்று இனத்தவர் உறுதுணையாக இருப்பர்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 24 ஆம் திகதி, தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தியாவதால் நன்மைகள் உண்டாகும். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் பலம் பெறும் பொழுது தொழில் வெற்றி நடை போடும். இலாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு தானாக வந்து சேரும். ஏழாம் இடத்திற்கு அதிபதியாகவும் புதன் இருப்பதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு கைகூடிவரும். "இதுவரை வந்த வரன்கள் ஒன்றும் பொருத்தமாக இல்லையே" என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தவர்கள், நல்ல தகவல் கிடைத்து மகிழ்ச்சியடையப் போகிறார்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 29 ஆம் திகதி, ரிஷபத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி வக்கிர நிவர்த்தியாவது யோகம்தான். அண்ணன் - தம்பிகளுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மாறும். எண்ணியபடியே பாகப்பிரிவினைகள் சிறப்பாக நடைபெறும். பிள்ளைகளின் கல்வி மற்றும் கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பங்காளிப் பகை மாறும். 12 இற்கு அதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் விரயங்கள் ஏற்படத்தான் செய்யும். என்றாலும் சுபவிரயமாகவே இருக்கும். குடும்ப முன்னேற்றம் கருதி செலவிடுவீர்கள். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்குவது அல்லது பிள்ளைகளின் கல்யாண முயற்சியில் சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்படும். இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை தோறும் சூரிய வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் புத ஆதித்ய யோகமும் புத சுக்கிர யோகமும் செயற்படுவதால், பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். பொதுவாழ்வில் புகழ் கூடும். புதிய பொறுப்புகள் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். தாய்வழி ஆதரவு உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஊதிய உயர்வு கிடைக்கவும் வாய்ப்புண்டு.

## மகரம்

**மக்கள் சேவையே மகேசன் சேவை என்று சொல்லும் மகர இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே வீற்றிருக்கிறார். விரய ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றன. சுகாதிபதி செவ்வாய் வக்கிரம் பெற்றிருக்கிறார். எனவே திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லாமல் இருக்க வழிபாடுகள் தேவை.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மார்கழி 3 ஆம் திகதி தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். 6 இற்கு அதிபதி 12 ஆம் இடத்தில் வக்கிரம் பெறுவது நன்மைதான். விபரீத இராஜயோக அடிப்படையில் திடீர் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத சிலரின் சந்திப்பால் இதயத்தில் மகிழ்ச்சி கூடும். அதே நேரத்தில் பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் சொந்தங்களாலும் சொத்துக்களாலும் சில பிரச்சினை தலைதூக்கும். சொத்துத் தகராறுகளால் சொந்தங்களில் ஒருசிலர் உங்களை விட்டு விலக நேரிடும்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். பூர்வ புண்ணிய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து மோதல்கள் அகலும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் இணக்கமாக நடந்துகொள்வர். கேட்ட சலுகைகளும் சம்பள உயர்வும் கிடைக்கும். படித்து முடித்த பிள்ளைகளின் வேலைக்காகச் செய்த முயற்சி கைகூடும்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 24 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தியாவதால், தொழில் மற்றும் உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். உறவினர் பகை அகலும். உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்திணைவர். உத்தியோகத்தில் தற்காலிகப் பணியில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் கிடைக்கும். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினை அகலும். "வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படுகின்றதே, புதிய வாகனம் வாங்கலாமா?" என்று சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

மார்கழி 29 ஆம் திகதி ரிஷபத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் வக்கிர நிவர்த்தியாவது மிகுந்த யோகம்தான். வருமானப் பற்றாக்குறை அகலும். வாய்ப்புகள் வாசல் தேடி வரும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதில் மும்முரம் காட்டுவீர்கள். வர்த்தகம் சார்ந்த துறைகளில் நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் மீண்டும் வந்து சேரலாம். தடைப்பட்ட காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். உயர் அதிகாரிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். இலாபாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கும் மேல் முதலீடு செய்ய நினைத்தவர்களுக்கும் வங்கிகளின் உதவி கிடைக்கும். தங்கு. தடைகள் அகலும். இந்த நேரத்தில் சம்பள உயர்வுடன் கூடிய உத்தியோக வாய்ப்புகள் தேடி வரலாம். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும். இம்மாதம் தினந்தோறும் கணபதி வழிபாட்டை மேற்கொண்டால் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஜென்மச் சனியின் ஆதிக்கமும் விரய ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்கிரன் சஞ்சாரமும் இருப்பதால் பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும். அதே நேரத்தில் செலவு நடைகளும் அதிகரிக்கும். இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் இனிமை தரும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பது நல்லது. கட்டடப் பணி பாதியிலேயே நிற்கலாம். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த மாற்றங்கள் உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.dlb.lk



கடினமான காலங்களில் - ஒற்றுமையாக நின்ற எம்மோடு
ஒன்றாக பயணிக்க முயற்சிக்கும் நேரத்தில்.....

**கிறிஸ்தவர்கள் உட்பட**
**அனைத்து இலங்கை மக்களுக்கும்**
**இனிய கிறிஸ்துமஸ்**
**வாழ்த்துக்கள் !**



வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

**அபிவிருத்தி லொத்தர் சபை,**
இல-356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ் கொழும்பு 02.
தொலைபேசி இல - 0114 824 824

(கு-1880)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார் தின சிறப்பிதழ்

# கிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வுகள் அர்த்தமுள்ளதாக அமையட்டும்



ஆதாமும் ஏவாளும் செய்த பாவங்களினால் மனுக்குலம் யாவும் சீரழிந்து கெட்டுப்போயிருந்த போது அம்மனுக்குலத்தை மீட்டு உலகிற்கு அமைதியையும் சமாதானத்தையும் அருள பூவுலகில் கடவுள் தம் ஒரே மகன் இயேசுவை அனுப்ப திட்டமிட்டு அன்னை மரியாள் மூலமாக அதனை நிறைவேற்றுகின்றார்.

இயேசுவின் பிறப்பு என்பது ஆன்மிக, உடல் ரீதியாக இரட்டை அற்புதங்களைக் கொண்டவையாக அமை கின்றன.

ஒன்று இறைவன் மனிதனானார். இது ஆன்மிக அற்புதம். மற்றையது கன்னிப்பெண் (மரியாள்) கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுக்கின்றாள். இது உடல் ரீதியான அற்புதம். இந்த இரண்டு அற்புதங்களும் ஒரே நேரத்தில் எவரும் அறியாத மறைமுக நிகழ்வாக நடை பெற்றிரு க்கின்றது.

இந்த இரண்டு அற்புதங்களும் எதனை எமக்கு சுட்டிக்காட்டுகிறது என்றால் நாமும் ஆன்மிக, உடல் ரீதியான பாவ இருளை களைந்து விட்டு ஒளியாகிய இயேசுவைப் பற்றிக் கொண்டு தூய்மை வாழ்வு வாழ வேண்டும் என்பதே ஆகும். மறைமுகமாக நடைபெற்ற இயேசுவின் பிறப்பின் செய்தியை உடனடியாகவே வான தூதர்கள் எல்லா மக்களுக்கும் அறிவிக்கின்றனர்.

அன்று படிப்பறிவில்லாத சமூகத்தால் புறக்கணிக் கப்பட்ட வறுமையில் வாழ்ந்த இடையர் கூட்டம் இயேசுவின் பிறப்பைப் பற்றி வானதூதரின் அறிவிப்பை முதலில் கேட்டு அதனைச் சரிவர அவர்கள் புரிந்து கொண்டதனால் தான் "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" என்று பாடி ஆர்ப்பரித்து மகிழ்ந்தார்கள்.

உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்து வேன் என்று **எசாயா** இறைவாக்கினார் மூலமாகவும். "இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி" என்று சிமியோன் மூலமாகவும் கடவுள் வெளிப்படுத்தியுள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு கிறிஸ் தவர்கள் வாழாத பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மக்களுக்கும் இயேசுவின் பிறப்பு பற்றிய வரலாற்று நிகழ்வுகளை நடத்தி அவர்களையும் மகிழ்விக்க வேண்டும். இப்படியான நிகழ்வுகளால் அவர்களும் இயேசுவைப்பற்றி அறிந்து கொள்ள வாய்ப்புகள் உருவாகும். வட்டத்துக்கு வெளியே அவர்களை நிறுத்தி விட்டு வட்டத்துக்குள்ளே நாம் நின்று கொண்டு இயேசு வின் பிறப்பை கொண்டாடும் நிகழ்வுகள் கடவுள் முன் அர்த்தமற்றதாகிவிடும்.

இம்முறை நாம் இயேசுவின் பிறப்பை தேவையற்ற முறையில் ஆடம்பரமாக, களியாட்டமாக கொண்டாடு வதை தவிர்த்து இன, மத பேதமின்றி பொருளாதார நெருக்கடியினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும் வறுமை காரணமாக படிப்பை தொடர முடியாது பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களின் மீள்கற்றல் செயற்பாடுகளுக்கும் உதவிடுவோம். ஏனெனில் "உன் மீது நீ அன்பு கூறுவது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக" என்று இயேசு நல்ல சமாரித்தன் உவமை மூலம் எமக்கு கற்பிக்கின்றார். இந்த படிப்பினை செயல் வடிவமாக எம்மில் ஏற்படுமாக இருந்தால் எமது உள்ளத்திலும் இல்லத்திலும் ஆலயத்திலும் இயேசு நிச்சயமாக பிறப்பார். கிறிஸ்மஸூம் அர்த்தமுள்ளதாக அமையும்.

**க. அருள்நேசன், குருநகர்**

---


"பாலகன் பிறந்த இனிய இந்நாளில் வீறுநடை
கொண்டு ஓராண்டு நிறைவினிலே"
"சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம்
குற்றமே" என்ற கொள்கையில் தவறாத

நிர்மாண மேம்பாட்டு மையம்
**Construction Development Centre**
(அரச சார்பற்ற நிறுவனம்)

- நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட யாழ்.மண்ணில் இயங்கும் ஒரே ஓர் அரச சார்பற்ற நிறுவனம்.
- 100 இற்கும் மேற்பட்ட பயன் பெறுநர்கள் தமக்கான பயன்களைப் பெற்றுள்ளார்கள்.
- இலைமறை காய் போல தேசிய மட்டத்தினாலான செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கி திருத்தம் செய்யப்பட்டுள்ளன.
- அனுபவம் வாய்ந்த தொழில் சார் நிபுணர்களின் இலவச ஆலோசனைகள்.
- நிர்மாண விதிமுறைகள் சார் விழிப்புணர்வு செயற்பாடுகள், கலந்துரையாடல்கள்.
- குறைந்த செலவில் நிறைந்த கட்டடம் அமைப்பதற்கான இலவச ஆலோசனைகள்.
- தேசிய மட்டத்திலான செயற்பாடுகள்

சேவை பெறுநர்களாக எம்மோடு இணையுங்கள். சந்தா எதுவுமில்லை.

**நிர்மாண மேம்பாட்டு மையம்,**
**இல.8, நல்லூர் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல -**
**021 222 5534**
**077 711 1469**

(13885)


### மெழுகின் ஒளிதனில் மீட்பரை தொழுவோம்




மாட்டிடை குடில் தனில் மாண்புறு பாலகன்
மார்கழி குளிர் தனில் மேய்ப்பனாய் பிறந்தார்
பாட்டொடு தேவனை பரிவுடன் நினைந்து
பெருகிடும் எம்மவர் துயரம் விலகிட
காட்டிய கருணை மலர்வின் வடிவினில்
கரம்தனை கூப்பியே நாதரை தொழுவோம்
மீட்பரை நாமெலாம் மெழுகின் ஒளிதனில்
மகிழ்வுடன் இணைவோம் மக்களே வாருங்கள்

**"கலாபூசணம்" கே. ஆர். திருத்துவராஜா**

---

## இயேசுவின் அன்பில் நிலைத்து அவரது வருகையை கொண்டாடுவோம்



ஏழைகளின் உள்ளத்திலே கடவுள் வாழ்கிறார் என்ற வேத வாக்கியத்தை மெய்ப்பிக்கும் வகையில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மாடு மேய்ப்பவர்களின் மத்தியில் மாட்டுத் தொழுவத்தில் நடந்தது. இயேசு கிறிஸ்துவின் உண்மையான அன்பில் நிலைத்திருந்து அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் வகையில் இயேசு கிறிஸ்துவின் வருகையை கொண்டாடுவோம் என டெய்சி பற்றிமா நற்பணி மன்றத்தின் தலைவரும், தந்தை செல்வா சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவரும் லயன் அ.பி.ஜோசேப் மனோகரன் தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் மனிதன் தனது பேராசையினால் பிரச்சினைக்கு தள்ளப்பட்டிருக்கும் இன்றைய வாழ்க்கை முறையில் இருந்து விலகி இயேசு நாதர் காட்டிய அன்பு, கருணை, மன்னிப்பு ஆகிய கிறிஸ்தவ மதத்தின் அடிப்படைகளின் பாதையில் வாழ்க்கைப் பயணத்தை நிம்மதியாகவும் ஆர்த்தமுள்ளதாகவும் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

(நி-5654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 376
Viber 076 636 3378



# அடுத்தவர் ஆட்டிவிக்கும் கைப்பொம்மைகளா நாம்?

அபிமன்யு

ஈழம் கேட்டு போராடியதன் விளைவு தமிழினத்திற்கு ஆறாத வடுக்களையே பரிசாகத் தந்தது. இந்த உலகில் தமிழினம் பட்ட கொடுமையை வேறு எந்த இனமும் பட்டிருக்காது. அந்தளவிற்கு தமிழினம் போரினால் பல கொடுமைகளை அனுபவித்தது.

இவ்விடத்தில் தமிழினம் பட்ட கொடுமைகளை எழுதி முடித்துவிட முடியாது என் பது தான் உண்மையானது.

தமிழினம் பட்ட துன்பத்திற்கும் இழப்பிற்கும் வேறு யாரும் பொறுப்பாளிகள் அல்ல.

எம் தமிழ் தலைமைகளே காரணம் என்பதை நாம் இவ்விடத்தில் ஆணித்தரமாகக் கூறித்தான் ஆக வேண்டும்.

தமிழினம் பட்ட துன்பங்களை கண்டு கொதித்தெழுந்த இளைஞர்களுக்கு உத்வேகம் கொடுத்ததும் இனி நாம் பணிந்து போக கூடாது பாய்ந்தாக வேண்டும் என்று இளைஞர்களுக்கு கூறிவிட்டு அந்தப் பாதையில் இருந்து பின்வாங்கினர் எம் தலைவர்கள்.

அது போராட தலைப்பட்ட இளைஞர்களிடத்தே வேறு மாதிரியான தோற்றத்தை உண்டு பண்ணியது.

இதுவே தமிழினம் தோற்றுப்போக முக்கிமான அத்திபாரமாக அமைந்தது. அதுவரை ஒன்றாய் ஒற்றுமையாய் இருந்து போரிட்ட இளைஞர்கள் பிரிவுகளை எதிர்கொண்டனர்.

அந்தப்பிரிவுகள் ஆயுதங்களுக்கு பலியாகிப்போன வரலாறுகளை நாம் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட முடியாது.

காலம் காலமாய் ஆட்சியாளர்களின் வர்ணப் பேச்சுக்களுக்கு மடங்கிப் போன எம் தலைமைகளை நினைத்து கண்ணீர் விடுவதைத் தவிர வேறு எதையும் தமிழினத்தினால் செய்து விட முடியவில்லை.

> “தமிழினத்திற்கான தீர்வு என்னும் விடயத்தில் ஒன்றுபட்டு செயற்படாமல் இருப்பதற்கு தமிழ்த் தரப்பை பிரித்தாலும் செயலில் ஈடுபடும் அரசுகளிடத்தே அலேட்டாக இருப்போமே.”

ஆனாலும் அவர்கள் தொடர்ந்து பாராளுமன்றம் சென்ற கொண்டுதான் இருந்தார்கள், இருக்கிறார்கள் என்பது தான் கசப்பான உண்மை.

சரி அடுத்த தேர்தலில் பார்த்து விடுவோம் என எச்சரிக்கை விடுத்தாலும் இவர்களைத் தவிர வேறு எந்தத் தெரிவும் தமிழினத்திடம் இருந்ததே இல்லை.

2009 உட்ன் தமிழினத்தின் போராட்ட வரலாறு முற்றுப்பெற மீண்டும் தமிழினத்திற்கான காவலர்கள் என தம்மை முற்படுத்திய தமிழ்த் தலைமை இதோ புதுவருடத்திற்குள் வருகிறது தீர்வு. இதோ பொங்கலுக்குள் வருகிறது தீர்வு என தமிழினத்தை ஏமாற்றினார்களே தவிர தீர்வு கிடைத்த பாடாய் இல்லை.

இதில் தமிழ்த் தலைமைகளின் சுயநல அரசியல் போக்கு மிகத் தெளிவாகத் தெரிந்த போதிலும் அதை எவரும் கண்டு கொள்வதாய் தெரியவில்லை.

சுருங்கக் கூறின் அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா என்கின்ற திரைப்பட வசனத்தைக் கூறித் தமக்குத் தாமே தலையில் மண் அள்ளிப்போட்டது தமிழினம்.



இங்கு தான் நாம் ஒரு விடயத்தை பேசவோ, நினைக்கவோ தவறி விட்டோம்.

ஆம், ஒற்றுமை என்ற சொற்பதம் எம்மிடம் மருந்துக்கும் இல்லாது போனது தான் நிதர்சனமானது.

தமிழினத்தின் பிரச்சினைக்கு தீர்வு கேட்டு நாம் ஒன்றிணைவோம் என்ற பேச்சுக்கே அவர்களிடத்தில் இடமிருந்ததில்லை.

அவர்களுக்கு தேவை எதுவெனின், எவ்வாறு அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவது என்பதுதான்.

இதற்காக எந்த எல்லை வரை சென்று வர அவர்கள் தயாராக இருந்தார்களே தவிர தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் தயாராகவில்லை.

அண்மையில் கூட தமிழ்த் தரப்புக்களைச் சந்தித்து தமிழினத்திற்கான தீர்வை வழங்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க் தெரிவித்திருந்தார்.

இதோ சந்திப்பு நடக்கப் போகிறது என மக்கள் நினைத்துக்கொண்டிருக்க ஜனாதிபதியிடம் இருந்து அழைப்பு வரவில்லை என்றது தமிழ்த் தலைமை.

நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

ஜனாதிபதி தலைமையிலான குறித்த பேச்சு வார்த்தையில் நீதியமைச்சர், சட்டமா அதிபர், பிரதமர், கடற்றொழில் அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சந்திப்பில் ஐந்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு இணங்கியதாகவும் தேசிய பாதுகாப்புச் சபை கூடி தமிழர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அரசியல் அமைப்பு தொடர்பில் கலந்துரையாட அரசு இணக்கம் தெரிவிப்பதாகவும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

தமிழினத்திற்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் தமிழினத்திற்கு ஆர்வம் உண்டென்றபோதும் ஏனைய கட்சி பிரதிநிதியைத் தவிர்த்து இரா.சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் ஏன் இந்தச் சந்திப்பில் பங்கு கொண்டார்கள் என்ற கேள்வி ஏனைய கட்சி தலைவர்களிடமும் தமிழினத்திடமும் எழுந்துள்ளது.

குறித்த சந்திப்புக்கு பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரன் தனது கண்டனத்தையும் தெரிவித்திருந்தார்.

இது கண்ட அரசாங்கம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும் எம்.ஏ.சுமந்திரனையும் ஜனாதிபதி சந்தித்தது உத்தியோகபூர்வமற்றது என அறிவித்திருந்தது.

இவ்விடத்தில் நாம் இரண்டு விடயங்களைப் பிரித்தறிய வேண்டும்.

ஒன்று- தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்காமல் அரசாங்கம் சம்பந்தனையும் சுமந்திரனையும் சந்தித்ததனூடாக தமிழ்க்கட்சிகளைப் பிரித்தாள்வதற்கு முயற்சிக்கிறதா?

இரண்டு-தமிழ்க் கட்சிகள் ஒன்றாய் ஒற்றுமையாய் எமக்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளாமல் தனித்தனி சந்திப்புக்களை மேற்கொள்வதால் அரசாங்கத்தின் பிரித்தாளும் செயலுக்கு துணைபோகிறதா?

இவ்விரு கேள்விக்கும் பதில் கூறுவது கடினமாயினும் அரசின் காய்க்குள் பழம் விடும் செயற்பாடு மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

தமிழ்த் தரப்புக்களை சந்திப்பதற்கு முன் இவ்வாறான தனிச் சந்திப்புகளை செய்வதனூடே தமிழ்த்தரப்புகளிடையே முரண்பாடு எழும்.

அந்த முரண்பாட்டை அரசு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். இதைப் புரியாமல் அரசின் சூழ்ச்சிக்குள் நாம் வீழ்வோமாக இருந்தால் அது தமிழினத்திற்கான தீர்வை ஒரு நாளும் தராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் அவர்கள் எழுந்தார்.

கவிஞர் துரையர் என்று அன்பாக அழைக்கப்படும் ஓய்வுநிலை அதிபர் கலாபூஷணம் சு.துரைசிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார். சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் துரையர் வலம்புரிப் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் குழந்தைக் கவிதைகள் மற்றும் இந்துமதத்தில் பத்து எனும் இறுவட்டு எனப் பல ஆக்கப் படைப்புகளைத் தந்தவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

எப்படி விதானையார் மடிச்சுக்கட்டி நோயெல்லாம் மாறிவிட்டுதோ மூப்பர் விசாரித்தார்.

**விதானையார்:** அதெங்க மாறுகிறது. கமநல சேவை நிலையம் தந்த யூரியாவாலதான் பயிருகள் மஞ்சள் அடிக்கிறதும் மடிச்சுக்கட்டி நோய்க்கு ஆளாகுவதும் நடக்குது. இருந்தும் நாங்கள் அதே உரத்தைத்தானே போட்டுக் கொண்டிருக்கிறம். பின்ன, எப்படி நோய் மாறும்.

**கங்காணி:** அட; சிலபேருக்கு சில மருந்துகள் அலேர்ஜி போல இந்த உரமும் நெற்பயிருக்கு அலேர்ஜி போல.

**பண்டிதர்:** என்னைப் பொறுத்தவரை இது இலங்கையின், நெல் உற்பத்தியைத் தாரவார்க்கிறதுக்கு தரப்பட்ட உரம் எண்டுதான் நான் சொல்லுவன்.

**விதானையார்:** அதெண்டால் உண்மைதான். இந்த முறையைப் போல என்ர வாழ்க்கையில இப்படியொரு நோய் நெல்லுக்கு ஏற்பட்டதை நான் காணல்ல. சிலருக்கு உடம்பில ஏற்படுகிற தோல் வியாதி மாதிரித்தான் எல்லா நெற் பயிர்களும் இருக்குது.

**சிறாப்பர்:** அப்ப இது தொடர்பில விவசாயப் பகுதி ஒரு நடவடிக்கையும் எடுக்கல்லயோ.

**விதானையார்:** எங்கட நாட்டில விவசாயம், கால்நடை உள்ளிட்ட வெளிக்களப் பணிகள் படுதோல்வி என்பதுதான் உண்மை.

**வாத்தியார்:** அப்ப இந்த முறை அரிசியின்ர விலை கடுமையாகத்தான் இருக்குமெண்டு சொல்லுறியள்.

**கங்காணி:** இலங்கையில அரிசியின்ர விலையை அரசாங்கம் தீர்மானிக்கிறதில்லைத் தானே.

**மூப்பர்:** அப்ப கங்காணியார் அரிசியின்ர விலையை ஆரு தீர்மானிக்கிறது.

**கங்காணி:** எங்கட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கிறாரல்லோ. அவற்ற தமையன் தான் இலங்கையில அரிசியின்ர விலையைத் தீர்மானிக்கிறவர்.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மைதான். இலங்கையில மிகப் பெரிய அரிசி மில் அவற்ற தானே.

அறுவடை காலங்களில அரிசியின்ர விலையைக் குறைக்க வேணும் எண்டு சொல்லி, விவசாயிகளிட்ட இருந்து மிகக் குறைந்த விலையில நெல்லை வாங்கி தன்ர களஞ்சியத்தில அடுக்கிப் போடுவார். பிறகு குறைந்த விலையில விற்க முடியாதெண்டு தர்க்கம் புரிந்து அரிசியின்ர விலையைக் கூட்டி விற்பார்.

**சாத்திரியார்:** எண்டைக்கு எங்கட விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்குதோ அப்பதான் விவசாயிகளும் மனச் சோர்வின்றி வேளாண்மை உள்ளிட்ட விவசாய உற்பத்தியில மனமாக ஈடுபடுவினம்.

**வாத்தியார்:** உடம்பை வருத்தி வெயிலில காய்ஞ்சு விவசாயம் செய்யிற விவசாயிகளின்ர உற்பத்திகளுக்கு இந்த நாட்டில நல்ல விலை கிடைக்குமெண்டு நம்புறியளோ. ஒரு கிலோ வாழைப்பழத்தை விவசாயிகளிட்ட இருந்து ஐம்பது ரூபாவுக்கு வாங்கி பின்னர் ஒரு கிலோ பழத்தை இருநூறு ரூபாவுக்கு விற்கினம்.

இந்த அதர்மத்தனம் இருக்கும் வரை யாரும் உய்ய முடியாது.


இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

அதேநேரம் எங்கட கடலில எங்கட கடற்றொழிலாளர்கள் பிடித்த நல்லின மீன், கணவாய், இறால், நண்டு என எதையும் நாங்கள் வாங்க முடியவதில்லை. எங்களுக்குத் தரவும் மாட்டினம். கொழும்புக்கும் வெளிநாட்டிற்கும் கடல் உணவு அனுப்புகிறவர்கள் எல்லாத்தையும் வாரிச் சுருட்டிவிட, எங்களுக்கு சூடையும் வாளையும் தான் மீன். அதோட தாய்க்குப் பின்னால கூடப் போகத் தெரியாத குருமன் நண்டுகளை வைச்சுக் கொண்டு அதற்கு எங்கட சந்தையில பவுண் விலை சொல்லுகினம்.

இதுகளைக் கவனிக்க இஞ்ச ஆரு இருக்கினம்.

**வாத்தியார்:** அதுசரி யாழ்ப்பாண மாநகரத்தை அழகுபடுத்துகிற வேலைத் திட்டத்தில ஒரு நடவடிக்கையாக யாழ்ப்பாண பிரதம தபாலகம் அமைந்திருக்கிற சந்தியில வள்ளுவர் சிலை அமைக்கிற வேலை நடக்குது. இது நல்ல விடயம். அதை நாங்கள் நிச்சயம் பாராட்ட வேணும்.



## எங்கட கடல் உணவெல்லாம் வெளிநாடு போகுது பாருங்கோ

**பண்டிதர்:** அதுசரி ஆனால், வள்ளுவர் சிலையில காகம் எச்சம் போடாத வகையில கூரை அமைத்து சிலையைப் பாதுகாக்கிற வேலையைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்ய வேணும்.

**சிறாப்பர்:** என்ன பண்டிதர் சொல்லுறியள்.

**பண்டிதர்:** யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில ஒரு வள்ளுவர் சிலை இருந்தது.

அதில வீதிச் சமிக்ஞை (சிக்னல்) பொருத்துவதற்காக வள்ளுவர் சிலை அகற்றப்பட்டது.

இப்ப அந்த வள்ளுவர் சிலைக்கு என்ன நடந்தது எண்டது தெரியாது. இது திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா யாழ். மேயராக இருந்த போது நடந்த சம்பவம்.

அதால இனி வள்ளுவர் சிலை அமைக்கும் போது வள்ளுவர் சிலையில காகம் எச்சம் போடாமல், மழை வெயில் படாமல் சிலையை நிறுவ வேணும்.

சுருங்கச் சொன்னால், செம்மணிச் சந்தியில சிவலிங்கத்திற்கு அமைக்கப்பட்ட இருப்பிடம் போல வள்ளுவருக்கும் அமைக்க வேணும். தேவையெண்டால் இடத்துக்கு ஏற்ப அளவுகளில மாற்றம் செய்யலாம்.

**விதானையார்:** யாழ்ப்பாண நகரை தூய்மையாக வைத்திருக்கிற முயற்சிக்கு எல்லாரும் ஒத்துழைப்பு வழங்க வேணும். அதேநேரம் தெருவில குப்பைகள் கொட்டப்படுவதையும் தெருநாய்களைக் கட்டுப்படுத்துவதிலும்தான் யாழ்ப்பாண மாநகர சபையின் வெற்றி தங்கியிருக்குது.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook

அன்புள்ள வியாசர் பெருமகனாரே தமிழர்களுக்கு தற்போது தேவை முகநூலா? தமிழ் நூலா?

**அகிலன் கனகராஜன்குளம்**

**போட்டிக்கு ஓடி பொதுமக்கள் உயிரைப் பறிக்கும் சாரதிகளைப் பற்றிக் கூற முடியுமா?**

இந்த சிறுமைத் தனத்தை என்னவென்று கூறிவிட.
ஒரு வாகனத்தில் ஏறும் பயணிகள் அத்தனை பேரின் உயிரும் அந்த ஒரு சாரதியின் கைகளிலேயே தங்கியிருக்கிறது.
அப்படி எனில் அந்த சாரதி எவ்வாறு வாகனத்தைச் செலுத்த வேண்டும்.
போட்டிக்கு ஓடுவதற்கும் வீரத்தைக் காட்டுவதற்கும் இது நேரமல்லவே.
உன்னை நம்பி ஏறிய அத்தனை பேரையும் உன் உயிரைக் கொடுத்து நீ காப்பாற்றினால் நீ ரைவர் அல்ல இறைவன்.
விசும்புக்கு ஓடி அத்தனை பேரையும் மாண்டு போகச் செய்தால் நீ சாரதி அல்ல சா..கெதியில்...

**ஜெகமோகன் கொக்குவில்**

**அன்புள்ள வியாசர் பெருமகனாரே தமிழர்களுக்கு தற்போது தேவை முகநூலா? தமிழ் நூலா?**

தமிழினத்தின் பெருமை சொல்லும் நூல்கள் எத்தனையோ இருக்கும் போது எம் இளம் சமூகம் முகநூல் என்ற வலைக்குள் முகம் புதைத்துக் கிடப்பதை நினைக்கும் போது இறைவா இதைவிட கொடிது இந்த உலகில் உண்டோ என்ற எண்ணம் மேலோங்குகின்றது.
என்று முகப்புத்தகம் வந்ததோ அன்று வீட்டின் மேசைகளில் கிடந்த அரும் பொக்கிசப் புத்தகங்கள் செல்லரிக்கத் தொடங்கிவிட்டன.
இனிப் பேசிப் பயன் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை.

**சுதன் குப்பிழான்**

**வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தால்....?**

வெள்ளைக் கொடி என்பது சமாதானத்தைக் குறிக்கும் குறியீடு. அந்த சமாதானத்தைக் குறிக்கும் குறியீட்டுடன் ஒருவர் நிராயுதபாணியாக வருகிறார் எனின் அவருக்கான பாதுகாப்பை வழங்க வேண்டியது பாதுகாப்புப் படையின் தார்மீகப் பொறுப்பு.
ஆனால் அவர்களே வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களை அழித்தார்கள் என்ற செய்தி நெஞ்சை நொருங்க வைத்திருக்கின்றது.
எதிரியாயினும் நிராயுதபாணியாய் நிற்பவனில் கணைதொடுக்காதது தமிழ் மரபு.
இது ஏனோ எதிரிக்குப் புலப்படவில்லை என்பது தான் வேதனை.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**டனுஷ் யாழ்ப்பாணம்**

**காதல் என்ற பெயரில் ஏமாற்றுபவர் இவ்வுலகில் அதிகமல்லவா வியாசரே?**

உன்னை விரும்பிய அவனோ , அவளோ உன்னை விட்டுப் பிரிந்துவிட்டால் அவன் அல்லது அவள் எங்கிருந்தாலும் நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என நினைப்பது தான் உண்மை அன்பின் வெளிப்பாடு
ஆனால் இப்போது எனக்கு கிடைக்காத நீ யாருக்கும் கிடைக்கக் கூடாது என்ற சொல்லுடன் வன்மத்தை விதைக்கின்றது எம் சமூகம்.
அன்பாகப் பழகியவர்கள் எம்மை வெறுத்துவிட்டார்கள் என்பதற்காக அவர்களை அழிக்க நினைப்பது ஒரு நாளும் அன்பின் வெளிப்பாடாய் இருக்காது என்பதே எமது கருத்து.

**மதுவன் மீசாலை**

**சினிமா நடிகை கே. ஆர். விஜயா பற்றிக் கூறமுடியுமா?**

1948 கேரளா மாநிலத்தில் பிறந்த தெய்வநாயகி என்ற இயற் பெயரைக் கொண்ட கே. ஆர். விஜயா 400 திரைப்படங்களுக்கு மேல் நடித்திருந்தார்.
இவர் புன்னகை அரசி என்றும் அழைக்கப்பட்டார்.
எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினிகணேசன், ஜெய்சங்கர் என பல முன்னணி நடிகர்களுடன் நடித்த இவர் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.
புன்னகை அரசி கே. ஆர் விஜயா 2012 ஆம் ஆண்டு இயற்கை மரணம் அடைந்தார்.



என்ன வியாசரே தமிழினத்திற்கு தீர்வுத் திட்டத்தைப் பெற்றுத் தருவார்களா தமிழ் தலைமைகள்?

**இதழினி புலோலி**

**கனவுகள் சிதைந்த பின்பும் நிறைவேறாதா என மனதின் ஓரம் துளிர்விடும் ஆசையை என்னவென்று கூறுவது?**

மனித வாழ்வில் கனவு காண்பதற்கு எப்போதும் தடையிருக்காது.
எமக்கான கனவு பலிக்கும் வரை நாம் எமது முயற்சியினைக் கைவிடக் கூடாது.
உனது வாழ்வின் இலட்சியம் பற்றிக் கனவு காண் என டாக்டர் அப்துல்கலாம் கூறியிருக்கின்றார்
இங்கு கனவுகள் சிதைக்கப்படுவதென்பது நாம் ஒழிந்து போய் உட்கார்ந்து விடுவதற்கான தல்ல.
மீண்டும் நாம் முயற்சி செய்து எமது எண்ணத்தை நிறைவேற்ற எமக்கு இறைவன் தரும் சந்தர்ப்பம்.
கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிடாமல் வெற்றி காண்பதே சாலச் சிறந்தது.

**தாரா மாதகல்**

**இன்பத்திற்கும் துன்பத்திற்கும் நடுவில் இருக்கும் மனித வாழ்வைப் பற்றி?**

மனித வாழ்வு என்பது நிலையில்லாதது.
இந்த நிலையில்லாத காற்றடைத்த பை கொண்ட உடலை வைத்துக் கொண்டு தான் மனிதன் நான் பெரிது , நீ பெரிது என்று பஞ்சாயத்து செய்து கொண்டிருக்கின்றான்.
பொன்னும் பொருளும் தான் உலகம்.
அதைவிட மற்ற எதுவும் பெரிதில்லை என மனசாட்சி அற்று நடந்தவர்கள் அனைவரும் இறுதிக் காலத்தில் பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லாமல் ஏங்கி ஏங்கி மழுந்து போன வரலாறுகள் நிறைய உண்டு.
இதைப் புரியாத வரை பொன் பொருள் தேடும் படலம் நடந்து கொண்டுதான் இருக்கும்.

**சிவம் வதிரி**

**என்ன வியாசரே தமிழினத்திற்கு தீர்வுத் திட்டத்தைப் பெற்றுத் தருவார்களா தமிழ் தலைமைகள்?**

குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா இது கொள்ளை அடிப்பதில் வல்லமை காட்டும் திருட்டு உலகமடா தம்பி திருந்தி நடந்து கொள்ளடா இதயம் திருந்த மருந்து சொல்லடா .
இவ்வாறு ஒரு தத்துவப் பாட்டு உண்டு உங்கள் கேள்வியை படிக்கும் போது எனக்கு இந்தப் பாட்டுத் தான் நினைவுக்கு வந்தது.
இன்றைக்கு எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன.ஆனாலும் தமிழினத்திற்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு எவரும் தயாராக வில்லை.
ஆனால் அடுத்த முறை எப்படி பாராளுமன்றம் செல்லலாம் என்ற திட்டமிடல் அவர்களிடம் நிறையவே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: ஞான ஒலி
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்



தேவனே என்னை பாருங்கள்
என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்
தேவனே என்னை பாருங்கள்
என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்
ஆயிரம் நன்மை தீமைகள்
நாங்கள் செய்கின்றோம்
நீங்கள் அறிவீர் மன்னித்தருள்வீர்

ஓ மை லார்ட் பார்டன் மீ

உங்கள் மந்தையில் இருந்து
இரண்டு ஆடுகள்
வேறு வேறு பாதையில் போய் விட்டன
இரண்டும் சந்தித்த போது
பேச முடியவில்லையே

தாய் மடியிலே மழலைகள் ஊமையோ
சேய் உறவிலும் நினைவுகள் மௌனமோ
நோய் உடலிலா மனதிலா தேவனே
நான் அழுவதா சிரிப்பதா கர்த்தரே..ஓ

மான்களும் சொந்தம் தேடுமே
இம் மானிடன் செய்த பாவம் என்னவோ
காவலே சட்ட வேலியே உன் பார்வையில்
பிள்ளை பாசம் இல்லையோ

செல்வங்கள் குவிந்தது
மாளிகை வந்தது
சேவை புரிந்திட சேவகர் ஆயிரம்
தேடிக் கொண்டாடிட நண்பர்கள் வந்தனர்
ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும்

நோ பீஸ்-ஆஃப் மைண்ட்

தேவனே என்னை பாருங்கள்
என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்

கேள் தருகிறேன் என்றதே நீரன்றோ
நான் பல முறை கேட்கிறேன் தரவில்லை
என் கருணையே திறக்குமா சன்னிதி
என் கர்த்தரே கிடைக்குமா நிம்மதி ஓ

ஓ லார்ட் ப்ளீஸ் ஆன்ஸர் மை ப்ரேயர்

கண்களில் கண்ணீர் இல்லையே
இந்த உள்ளமும் இதை தாங்கவில்லையே
கொண்டு வா இல்லை கொண்டு போ
உன் கோவிலில் வந்து சேவை செய்கின்றேன்

முள்ளை வளைத்தொரு மகுடம் அணிந்ததும்
ஆணி அடித்தொரு சிலுவையில் அறைந்ததும்
அன்று நடந்தது ஆவி துடித்தது
இன்று நடப்பது நெஞ்சு துடிக்குது

ஆஆ..ஆ..ஆஅஆஅ

தேவனே என்னை பாருங்கள்
என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்
என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்

# வல்லரசுப் போட்டியில் வடமிழுக்கும் நாடுகள்

**சமாதானத்துக்கான புறாக்களை உலகத்தின் பார்வைக்கு முன்னால் பறக்க விட்டுக் கொண்டு தங்கள் முதுகுக்குப் பின்னால் மனித இனத்துக்கு பேரழிவைத் தரக்கூடிய அணுவாயுதங்களை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள் இன்றைய சமகாலத் தேசத் தலைவர்கள்.**

இந்த உலகம் ஒரு தெய்வீகத் தன்மை வாய்ந்த, இயல்பான ஒரு நிரந்தர சத்தியத்தின் துணை கொண்டுதான் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையானது.

வண்டியின் சக்கரத்துக்கு அச்சாணி எப்படி ஆதாரமாக இருக்கின்றதோ அதே போல்தான் தெய்வீக சத்தியத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த உலகத்துக்கு அன்புதான் முழு ஆதாரமாய் எங்கும் வியாபித்து இருக்கின்றது.

எவ்வளவோ அதர்மங்கள், வன்முறைகள், யுத்தங்கள், அட்டூழியங்கள், சூழ்ச்சிகள் இந்த உலகத்தின் ஆன்மாவை அடியோடு உலுப்பியிருந்தாலும் மீண்டும் ஏதோ ஒரு வகையில் அன்பு கொண்டு இந்த உலகம் பின்னிப் பிணைக்கப்பட்டு ஒரு சீரான முறையில் இயல்பாக இன்று வரை இயங்கி வருவதே தெய்வீகத்தின் அற்புத தன்மைதான். அதற்கெல்லாம் இந்த விநாடி வரை உயிருடன் இருக்கும் நாம் அனைவரும் தான் சாட்சி பகர வேண்டும்.

உலகத்தின் சத்தியத்திற்குள் ஒரு ஆழ்ந்த அமைதியினுடைய அன்பைத் தேடவும் அதை அனுபவித்து வாழவும்தான் இறைவன் இவ்வுலகத்தின் மீது மனிதர்களைப் படைத்தான். ஆனால் அவர்களோ இவ்வுலகத்தை அழிப்பதற்கான அணுகுண்டுகளை இந்த விநாடி வரை உருவாக்கிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

படைப்பது இறைவனின் லீலை என்றால் அதை அழிப்பது மனிதனின் மூளை என்ற நிலையே தற்போது வரை நிலவி வருகின்றது.

ஒரு சக்தி வாய்ந்த அணுகுண்டை வடிவமைக்கும் திறன் ஒரு மனித மனதின் எண்ணத்தில் எழுகின்றது என்று சொன்னால்அந்த எண்ணம் அணுகுண்டை விட எவ்வளவு சக்தியானது என்று எமக்கு புலப்படுகின்றது.

அதேபோல் இவ்வுலகத்தை பின்னிப் பிணைத்திருக்கும் சுயநலமற்ற அன்பை மனதில் சிருஷ்டிக்கும் எண்ணமானது அந்த அணுகுண்டை விட அபார சக்தியானது. அதை மனித மனம் எளிதில் பின்பற்றுவதில்லை. ஏனெனில் எல்லாம் இலாபம் நிறைந்த சுயநலம்தான்.

இனங்களுக்கு இடையிலான, மதங்களுக்கு இடையிலான, தேசங்களுக்கு இடையிலான மனித பிரிவினைகளும் முரண்பாடுகளுமே தற்போது வரை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. எல்லைகளற்ற



இயல்பான அன்பு கொண்ட தெய்வீகமான உலகத்தில் என்று மனிதன் எல்லைகளை நிர்ணயிக்க ஆரம்பித்தானோ அன்றே ஒருமை என்பது பல கோணங்களில் பன்மையாக மாற்றம் அடைந்து பல விதமான கருத்துக்களுக்கும் முரண்பாடுகளுக்கும் பல கொடுமையான யுத்த வியூகங்களுக்கும் வழி வகுத்திருக்கின்றது.

சில தேசங்களின் தலைவர்களிடையே இருக்கும் பிடிவாதம் என்ற ஒற்றைக் காரணத்தினால் உலகின் அமைதி மனப்பான்மை என்பது பெரும் சீர்குலைவுக்கு உள்ளாகியுள்ளது. இதனால் சில தேசங்களின் மக்களினுடைய வாழ்விலும் அவர்கள் மனதிலும் சமாதானம் எப்போதும் எட்டாக்கனி தான்.

சமாதானத்துக்கான புறாக்களை உலகத்தின் பார்வைக்கு முன்னால் பறக்க விட்டுக் கொண்டு தங்கள் முதுகுக்குப் பின்னால் மனித இனத்துக்கு பேரழிவைத் தரக்கூடிய அணுவாயுதங்களை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள் இன்றைய சமகாலத் தேசத் தலைவர்கள்.

உலக மதங்களின் போதனைகள் கூட தலையிட முடியாத அளவுக்கு உயிர்களை வகை தொகையின்றி அழிக்கும் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது உலகத்தின் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் தேசங்களுக்கு இடையிலான பெரும் மோதல்களாக வெடிக்கத் தொடங்கி விட்டது. உண்மையில் ஆயுதங்கள்தான் இந்த உலகத்தை ஆளுகின்றது என்பதே தற்போதைய போரியல் இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. மதங்களின் போதனைகள் பெரும்பாலும் மறுதலிக்கப்படுகின்றது என்பதே பெரும் உண்மையாகும்.

அரிசிக்குப் பதிலாக ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றார்கள். காரணம் யார் புவிசார் வல்லரசு என்ற போட்டிக்காக. உண்மையில் யார் புவிசார் வல்லரசு ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வாழ்ந்து கொண்டு இருக்கும் மனசாட்சிதான் வல்லரசாக நிச்சயம் இருக்க முடியும். அந்த மனசாட்சியை எதிர்காலத்தில் மனித இனமானது உலகத்தின் நன்மை கருதி வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் உலகமானது மூன்றாம் உலகப் போரால் நிச்சயம் அழிந்து விடும் அபாயமே தென்படுகின்றது.

நவீன ஆயுதங்களை அன்பால் அழிக்கும் ஒரு ஆழ்நிலை எண்ணமே உலகத்தினுடைய மனித குலம் அனைத்துக்கும் தற்போது அவசியமாய் உள்ளது. அந்த ஆழ்நிலை எண்ணம் மனித மனதின் எண்ணமாய் இனம், மதம், தேசம் கடந்து உதிக்கும் வரை நவீன ஆயுதங்களின் ஆளுகைகள் இவ்வுலகத்தில் தொடரத்தான் செய்யும்.

**சாம் - ரமேஸ்குமார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலப்பந்து கடவுளுக்கு நிகராக அரியணையேறிய அரசன்

இறுதிப்போட்டியில் பிரான்ஸுக்கு எதிராக ஆர்ஜெண்டீனா உதைத்து வென்றிருக்கும் அந்தப் பந்தின் பெயர் "அல்-ஹில்ம்". அப்படியெனில், "The Dream" என்று அர்த்தம். அதாவது, கனவு! பந்தை உதைத்துத் தள்ளி உச்ச பட்சமான உலகக்கோப்பையை வெல்ல வேண்டும் என்பது அத்தனை வீரர்களின் கனவும். மெஸ்ஸியும் அதே கனா உடையவர்தான். இப்போது அந்த உலகக்கோப்பை கனா மெஸ்ஸிக்கு நிறைவேறியிருந்தாலும் இதற்கு அடித்தளமாக அவர் ஒரு பெரும் பிரயாணம் செய்திருக்கிறார். அதன் வழியே நாமும் அப்படியே பயணித்து கத்தார் உலகக்கோப்பையின் கொண்டாட்டங்களை சென்றடைவோம்!

2006 இல் 19 வயது கூட நிறைவடையாத நிலையில் ஜேர்மனி உலகக்கோப்பையில் மெஸ்ஸி களமிறங்கியிருந்தார். செர்பியாவிற்கு எதிரான போட்டிதான் அவருக்கு முதல் போட்டி. நெதர்லாந்தில் நடந்த 20 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பைத் தொடரில் ஆர்ஜெண்டீனா வெல்வதற்கு அதிமுக்கிய பங்களிப்பை அளித்தவர் பதின்ம வயது மெஸ்ஸிதான். 6 கோல்களை அந்தத் தொடரில் மட்டும் அடித்திருந்தார். அந்தத் தொடரில், கோல்டன் பூட், கோல்டன் பால் எல்லாம் அவருக்குதான். செர்பியாவிற்கு எதிராக 75 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸியின் களமிறக்கலுக்கு பின்னால் இருந்த கதை இதுதான். 75 ஆவது நிமிடத்தில் உள்ளே வந்த மெஸ்ஸி, தனது முதல் மாயாஜாலத்தை நிகழ்த்த எடுத்துக் கொண்டது என்னவோ மூன்று நிமிடங்கள் தான்.

ஆம், களத்திற்குள் கால்பதித்த மூன்றாவது நிமிடத்திலேயே க்ரெஸ்போவுக்கு ஒரு அசிஸ்ட்டை கொடுத்து அணியின் கோல் எண்ணிக்கையை உயர்த்தியிருந்தார். மெஸ்ஸியின் 35 வயது கால்களே அசிஸ்ட்களோடு திருப்திப்பட்டுக் கொள்வதில்லை. எனில், அந்த 19 வயது கால்கள் மட்டும் திருப்திப்பட்டுக் கொள்ளுமா என்ன? கோலுக்காக துடிதுடித்தது சீறிப்பாய்ந்தன. களமிறங்கி 13 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸிக்கு தேவையான அந்த கோல் கிடைத்து விட்டது.

மரடோனாவிற்கு பிறகு மந்திர தந்திரங்கள் அத்தனையையும் தனது இடது காலில் பொதிந்து வைத்துள்ள மாவீரன் ஒருவன் ஆர்ஜெண்டீனாவிற்கு கிடைத்து விட்டான் என உலகுக்கு அறிவிக்கப்பட்ட நொடி அது.

செர்பியாவை புரட்டியெடுத்து ஆர்ஜெண்டீனா அந்த போட்டியை பயங்கரமாக வென்றது. நெதர்லாந்துக்கு எதிரான அடுத்த போட்டியில் தொடக்க லெவனிலேயே மெஸ்ஸிக்கு அணியில் இடம் கொடுக்கப்பட்டது. நாக் அவுட்டுக்கு ஆர்ஜென்டீனா தகுதிபெறவே மீண்டும் மெஸ்ஸி பென்ச்சுக்கு போனார். ஜேர்மனிக்கு எதிரான காலிறுதியில் பெனால்டி சூட் அவுட்டில் ஆர்ஜென்டீனா கோட்டை விட்டது. மெஸ்ஸி ஓர் ஓரமாக உட்கார்ந்து கையறு நிலையில் தனது காலணியை ஆட்டியபடியே வெறித்து போய் அமர்ந்திருப்பார்.

ஒரு நல்ல அறிமுகமாக மெஸ்ஸிக்கு அந்த 2006 ஜேர்மனி உலகக்கோப்பை அமைந்தது. அதைத் தவிர மெஸ்ஸிக்கு அந்த உலகக் கோப்பையில் பெரிய கதாபாத்திரம் கிடைக்கவே இல்லை. 2006 இல் மெஸ்ஸி ஓர் அறிமுக வீரர். அவரின் இளம்பிராயத்து வித்தைகளை அறிந்து அவர் மீது ரசிகர்களுக்கு ஓர் ஆர்வம் இருந்தது அவ்வளவு தான்.

**டீயுயலில் தன்னிடமிருந்து பந்தை பறிக்க நினைக்கும் எதிராளியிடம் மெஸ்ஸி எத்தகு குணத்தை வெளிக்காட்டுவார்? போராடுவார்... மீண்டும் போராடுவார்... இறுதியில் வெல்வார்.**

ஆனால், 2010 தென்னாபிரிக்க உலகக்கோப்பை அப்படியில்லை.

ஜேர்மனிக்கும் தென்னாபிரிக்கவுக்கும் உலகக்கோப்பை இடம் பெயர்ந்த நான்கு வருட இடைவெளியில் மெஸ்ஸி ஒரு ஸ்டாராக, இல்லை இல்லை ஆர்ஜென்டீனாவின் இரட்சகனாக உருமாறத் தொடங்கிவிட்டார்.

2008 பீஜிங் ஒலிம்பிக்ஸில் ஆர்ஜென்டீனாவிற்கு தங்கம் வென்று கொடுத்தார். 2009, 2010 இல் கால்பந்து உலகின் தலைசிறந்த வீரருக்கு வழங்கப்படுகிற பாலோன்டிஆர் விருதை அடுத்தடுத்து தொடர்ந்து வென்றிருந்தார். இவற்றையெல்லாம் விட கூடுதல் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது அந்த நம்பர் "10". அறிமுகமாகி முதல் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு நம்பர் 18, 19 ஜெர்சிக்களை பயன்படுத்தி வந்த மெஸ்ஸி இந்த உலகக்கோப்பையில் தான் முதல் முதலாக "நம்பர் 10" ஜெர்சியோடு களமிறங்கினார். ஜெர்சி மட்டுமில்லை. அந்த நம்பர் 10 ஜெர்சிக்கு உயிரூட்டி பெரும் மதிப்புமிக்கதாக மாற்றிய ஆர்ஜென்டீனா காலப்ந்து கடவுள் "டியாகோ மரடோனா" வும் இந்த முறை மெஸ்ஸி பக்கம் நின்றார். ஆம், மரடோனா தான் ஆர்ஜென்டீனாவின் பயிற்சியாளர்.

2014 உலகக்கோப்பையிலும் முற்றிலும் வேறொரு கதையல்ல ஆர்ஜென்டீனா நிகழ்த்தியது. மெஸ்ஸியின் மாஸ் இன்னும் கூடியிருந்தது. அவர் ஒரு உலக சூப்பர் ஸ்டார். ஆர்ஜென்டீனாவை தாண்டியும் அவருக்கான ரசிகர் வட்டம் உலகம் முழுவதும் பரவியிருந்தது. எண்ணிலடங்கா விருதுகள், பார்சிலோனாவுக்காக எக்கச்சக்க சாதனைகள், விண்ணுயர புகழ் என மெஸ்ஸி ஓர் உச்சபட்ச இடத்தில் இருந்தார்.

மெஸ்ஸிதான் ஆர்ஜென்டீனா. ஆர்ஜென்டீனாதான் மெஸ்ஸி எனும் நிலை அது. இந்த முறை இத்தனை பெரிய எதிர்பார்ப்பையும் பொறுப்பையும் மெஸ்ஸி சரியாக மடைமாற்றி தரமான செயற்பாடுகளை காண கொடுத்தார்.

தொடர்ந்து ரன்னர்-அப் ஆகிக் கொண்டிருந்த கோபா அமெரிக்க தொடரில் கடந்த ஆண்டு பிரேசிலை வீழ்த்தி ஆர்ஜென்டீனா சம்பியன் ஆனது. மெஸ்ஸியும் மிரட்டியெடுத்தார்.



4 கோல்கள் கூடவே 5 அசிஸ்ட்டுகள். தொடரில் மொத்தமாக ஆர்ஜென்டீனா அடித்திருந்த 13 கோல்களில் 9 கோல்களில் மெஸ்ஸியின் பங்களிப்பு இருந்தது.

மீண்டும் உலகக்கோப்பைக்கான எதிர்பார்ப்புகள் உருவாகத் தொடங்கியது. இந்த முறையும் ஏமாற்றத்தை எதிர்கொள்ளும் யோசனை மெஸ்ஸிக்கு இல்லை. ஏனெனில், கட்டார்தான் அவரின் கடைசி உலகக்கோப்பை. இதை அவரே அறிவித்தும் விட்டார். பின்வாங்க நினைத்தாலும் காலம் அதற்கு கைக்கொடுக்காது என்பதால் நிச்சயமாக கடைசி உலகக்கோப்பைதான் என முடிவே ஆகிவிட்டது.

கட்டார் உலகக்கோப்பை சார்ந்த எதிர்பார்ப்புகளுக்கு எதிராக மெஸ்ஸி ஒரு Duel ஐத்தான் நிகழ்த்தியிருக்கிறார்.

இறுதியில் தனது ட்ரேட் மார்க் ஸ்டைலில் வெல்லவும் செய்திருக்கிறார். ஆரம்பமே கொஞ் சம் ஏமாற்றம்தான். சவுதி அரேபியாவிற்கு எதிராகவே தோல்வி.

ஆனால், ஆர்ஜென்டீனாவும் மெஸ்ஸியும் அதை ஒரு "Wake Up Call" ஆகவே பார்த்தனர். முதல் போட்டியிலிருந்தே மெஸ்ஸி ஸ்கோர் செய்ய தொடங்கிவிட்டார். இந்தத் தொடரில் ஒரே ஒரு போட்டியை தவிர அத்தனை போட்டியிலும் மெஸ்ஸி ஸ்கோர் செய்திருக்கிறார்.

இந்த உலகக்கோப்பையில் மட்டும் கிட்டத்தட்ட 700 நிமிடங்களை மெஸ்ஸி போட்டிகளின் போது களத்தில் செலவழித்திருக்கிறார். வேறெந்த வீரரும் இத்தனை நிமிடங்களுக்கு களத்தில் ஓடியாடவில்லை. அடுத்த வர்லாற்று நாயகனாக உருவெடுத்து நிற்கும் எம்பாப்பே உட்பட!

கடைசி உலகக்கோப்பையில் ஆடும் வீரர் இந்தளவுக்கு வியர்வை சிந்துவதே அணியின் மற்ற வீரர்களுக்கு பெரும் உத்வேகத்தைதான் கொடுத்திருக்கும்.

தனிப்பட்ட அளவில் பெரும் உழைப்பைக் கொட்டி அணியை முன்நிறுத்தியதன் பலனாக ஆர்ஜென்டீனாவிற்கு 86 இற்குப் பிறகு மீண்டும் ஓர் உலகக் கோப்பை கிடைத்திருக்கிறது.

மெஸ்ஸியும் ஒரு வரலாற்று நாயகனாக மரடோனா விற்கு அருகேயே சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையின் போர்வையில்

அலைதொடும் கரையினை போலுறுளும்
மலைதொடும் உணர்வுடன் வாழ்வினுள் சிறந்திட

தேய்பிறை நிலவினை போதையில் அடைத்திடும்
பணவெறி கொண்டிடும் பேதைகள் எழுந்திட

போரினைக் கடந்து மீண்டெழும் என் இனம்
போதையில் தவழ்ந்திட செய்திடும் சதிகள்

நாட்டினை அழித்திடும் விசமிகள் வழியே
விதைத்திடும் விதையாய் விழிமுன் தெரியுது


மேதைகள் பலவிதம் தோன்றிடும் பள்ளியில்
போதைகள் பரவிட காண்பது விதியோ?

அரசியல் நாடகம் நிகழ்ந்திடும் அரங்கில்
என் இனம் அழிந்திடும் போதையும் பாகமோ

மீண்டெழும் நோக்குடன் தமிழ் இன விதையாய்
போதையின் போர்வையை அகற்றிட இணைவோம்.

ந. விதுஷன்,
யா/ஹாட்லிக் கல்லூரி.

## வாழ்க வலம்புரியே!



வலம்புரி நாயகனே நீ தவழ்ந்த காலமழை– அன்று
இன்று துடிப்பான இளமைப் பருவமாம் 23 அகவை
காலம் கடந்தோடியது கண்ணுக்குத் தெரியலே
காலத்தின் பதிவில் என்றும் வலம் வந்திடுவாய்

நல்ல செய்திகளை நாளும் அறிந்திடவே
ஆரோக்கிய வாழ்வுக்கு ஆலோசனை தருவாயே
விளையாட்டு நிகழ்வுதனை விறுவிறுப்பாய் தருவாயே
சங்குநாதமாய் சங்கதியை சந்திக்கு வைப்பாயே

ஆலயத்தில் ஒன்றுகூடி அற்புதமாய் அலசிடுவாய்
வாசகரின் கேள்விக்கு வியாசராய் விளாசிடுவாயே
பழைய பாடல்களை பக்குவமாக நினைவூட்டுவாய்
கவிதைகளின் ஆக்கத்திற்கு களமதனை அமைத்திடுவாய்

கல்யாணமாலையிலே கனசோடி சேர்த்திட்டியே
அரசியல் களத்தை கட்டியமாக விளங்கிடுவாயே
ஆசிரியர் பகுதியிலே அன்பாக வேண்டுவாயே
உலகச் செய்திகளை உடனுக்குடன் தந்திடுவாயே


சமூக சீர்கேடுகளை சற்றும் தயங்காமல் எடுத்துரைப்பாய்
அனைவரின் கரங்களையும் இறுகப் பிடித்திடுவாயே
எம்மதமும் சம்மதம் என ஆன்மிகத்தை வளர்த்திடுவாயே
நாட்டு நடப்புக்களை நயமாக எடுத்துரைப்பாயே

எஸ்.பி.தனா, தெல்லிப்பழை.

## என்னை வாழ்வில் உயர்த்திய கரங்கள்

தோல்வியை தழுவும் வேளைகளில் என் கண்ணீரைத் துடைப்பவர்கள்
என் உயர்விற்காக தம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள்
வாழ்க்கை எனும் பாடத்தை புகட்டியவர்கள்

என் சந்தேகங்களை உடன்மறையச் செய்பவர்கள்
தாய்தந்தையராய் விளங்கியவர்கள்
என் வளர்ச்சியில் அமுது பருகுபவர்கள்



கு.யதுசா
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## வலம்புரி வாழ்க பல்லாண்டே!

நலந்தரும் செய்திகள் நிறைவாய்த் தந்தும்
பலந்தரும் கருத்துகள் முறையாய் அளித்தும்
இலங்கிடும் இதழாய் வையகம் முழுதும்
வலம் வரும் வலம்புரி வாழ்க பல்லாண்டே!

ப. மகேந்திரன்
நாயன்மார்க்கட்டு.

## மௌனத்தின் தேடல்- 589



## கல்லாய் போனாயோ

கற்சிதைவுக்குள்ளே அநாதையாய்
மழலை இவன் உயிர் காத்து
அன்புடன் அரவணைக்க
வரம் அருளிய
இறைவா கல்லான
மனிதர்களாலே நீயும்
கல்லாய் போனாயோ
என தவறாய் நினைத்த
என் தவறை
மன்னிப்பாயாக.

கே.சாகித்தியன்,
சாவகச்சேரி.

## மௌனத்தின் தேடல்- 590



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## எவர் உணர்வார்! யாரறிவார்?

அழிவுகள் அனைத்துமோ
அனர்த்தங்களின் அட்டூழியங்களோ
அனுபவிக்கும் அனைவர்க்கும்
ஆறாத துன்பங்களும் தீராத தொல்லையுமாய்
இப்பெருங் கொடூரங்களுமே
இதயங்கள் தாங்கிட முடியாதவைகளே

தங்கத்தமிழன்,
காரைநகர்.

## நெஞ்சோடு...

இயற்கை அனர்த்தத்தில்
இடர்பாட்டுக்குள் சிக்கி
மயக்க நிலைக் குழந்தைகளை
மனதோடு தாயாக நெஞ்சோடு
அணைத்தெடுக்கும் கருணை
உளம் வாழட்டும் என்றும்

பவானிசன்,
நல்லூர்.

## வாக்கும் வாழ்வும்

இடிபாட்டுக் குவியல்களும்
வலிதாங்க முடியாமல்
இடம்பெயர்ந்தோர் கூற்றும்
இதய பீடத்தை நெருடும்
புள்ளிவிபரங்களின் வரைவும்
இழப்புக்களின் வகை தொகையை
துல்லியமாய் வெளிப்படுத்துவது
திகைப்புடன் சிந்திக்க வைக்கும்.

க. நாகராசா,
நுணாவில்.

## மரணித்துப் போகாது

உயர்ந்த மாடங்கள்
இடிந்து போகலாம்
உறவுகள் நட்புகள்
பிரிந்து போகலாம்
ஆனால்;
மனிதாபிமானம் மண்ணில்
மரணித்துப் போகாது.

பி.யதுர்சன்,
கொக்குவில்.

## தேடற்கரிய செல்வங்கள்

போரினால் கைவிடப்பட்ட நகரத்துக்கு
பொன் பொருள் தேடிப் புறப்பட்டோம்
தேடற்கரிய குழந்தைச் செல்வங்கள்
கிடைத்து விட்டன.

பி: மதுஷ்சன்,
நைவிட்டி.

## காவு வாங்கப்படும் உயிர்கள்

உலகிலே
இன்று புனிதப் போர் என்ற பெயரில்
தீவிரவாதிகளால்
இப்படிப் கட்டடங்களும் பல மனித உயிர்களும்
மலிவாகக் காவு வாங்கப்படுகின்றன.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

காலத்தின் பதிவு 47

## முடியாதவிழா

அதிலிருந்த சிவப்பு ரத்தினங்கள் விளக்கொளியில் பெரும் தீப்பந்தங்களெனச் சுடர் விட்டன. அந்த மாலை மஞ்சளழகியின் முகத்துக்கு எதிரேயிருந்ததால் அதன் சிவந்த ஒளிகள் அவள் முகம் பூராவும் விழுந்து முகத்தையே மாணிக்கங்களால் இழைத்த பிரமையை விளைவித்தன.

"இந்த மாணிக்க மாலை விலை மதிக்க முடியாதது. எனக்குப் பாலித்தீவின் மன்னரால் கொடுக்கப்பட்டது. இது அரச வம்சத்தை அலங்கரிக்க வேண்டிய பொருள். ஆகவே உங்கள் நடன அரசிக்கு, நடன மாணிக்கத்துக்கு, இதை நான் பரிசாக அளிக்கிறேன்" என்று மஞ்சளழகியின் கையில் மாலையைக் கொடுத்தான்.

அன்றிரவு ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளாலும் நிதானம் குன்றாத மஞ்சளழகி மகிழ்ச்சியுடன் அந்த மாலையைப் பெற்றுக் கொண்டாள்.

கழுத்திலும் அணிந்து அழகு பார்த்தான். கூட்டத் தின் மகிழ்ச்சிக் கூச்சல் வானைப் பிளந்தது. "இத்துடன் இந்த விழா முடி கிறது" என்று அறிவித்தான் இளையபல்லவன்.

அவன் இரைந்தே பேசினான். அவன் குரலை விடப் பலமாக எழுந்தது இன்னொரு குரல்.

"இல்லை. விழா முடியவில்லை," என்று கூவிய வில்வலன் தனது வாளை உருவிக் கையில் பிடித்துக்கொண்டு மேடைக்கெதிரே பயங்கரமாக நின்றான். "என் ஆசையைத் தீர்ப்பதாக உறுதி கூறியிருக்கிறாய்.

அது தீர்ந்த பிறகுதான் இந்த விழா முடியும். இல்லையேல் நீ முடிந்து விடுவாய். இங்கு மற்றும் பலரும் முடிந்து விடுவார்கள். எடு வாளை," என்று கூறிக் கொண்டே மேடை மீது ஒரு காலையும் எடுத்து வைத்தான்.

கூட்டம் மீண்டும் பயத்தின் வசம் சிக்கியது. பெரும் விபரீதம் அடுத்தபடி நேரிடுவதைத் தடுக்க முடியாதென பலவர்மனும் முடிவுக்கு வந்தான்.

அதுவரை அச்சம் தோன்றாத மஞ்சளழகியின் முகத்திலும் அச்சத்தின் சாயை பெரிதாகப் படர்ந்தது. அதுமட்டுமல்ல, இளையபல்லவன் இடையில் அவன் வாள் இல்லாததையும் கவனித்ததால் மூர்ச்சை போடும் நிலைக்கு அவள் வந்துவிட்டாள்.

### எதிர்பாராத விபரீதம்

"இத்துடன் இந்த விழா முடிவடைகிறது" என்று இளையபல்லவன் கூறிய அதே சமயத்தில், "இல்லை" என்ற சொல்லைப் பயங்கரக் குரலில் உதிர்த்து, நடன மேடை மீது ஒரு காலையும் மணல் தரையில் மற்றொரு காலையும் ஊன்றிக் கண்களில் கொலைக்குறியுடனும் கையில் உருவிப் பிடித்த வாளுடனும் நின்ற வில்வலனைக் கண்டதும் பெரும்பீதிக்கு உள்ளான மஞ்சளழகி, அந்தக் கொலைகாரனை எதிர்க்க இளையபல்லவன் இடையில் வாளும் இல்லாததைக் கவனித்ததும் தலை சுழலும் நிலைக்கு வந்து விட்டதால், தன் பக்கத்தில் நின்ற தோழியொருத்தியின் தோளில் கையைப் போட்டுச் சற்று நிதானித்துக் கொள்ள முயன்றாள்.

உயிரையோ போர்த் தர்மங்களையோ சிறிதும் மதிக்காத பதக் இனத்தில் உதித்த வில்வலன், இளைய பல்லவன் நின்ற இடத்திலேயே வாளால் குத்திக் கொன்றால் ஆச்சரியமில்லையென்பதை அவள் நன்றாக அறிந்திருந்தாளாதலால், அவன் கதி அடுத்த கணம் என்ன ஆகுமோ என்று எண்ணிப் பெரிதும் கலங்கினாள்.

வில்வலன் மேற்கொண்டும் பேசத் தொடங்கி, "எடு வாளை!" என்று சொன்னதும் அவன் உடனடியாகக் கொலைத் தொழிலில் இறங்கமாட்டான் என்ற எண்ணத்தால் அவளுக்குச் சிறிது சுரணை வந்தாலும், எடுப்பதற்கு வாளேதும் இளையபல்லவனிடம் இல்லாததாலும், இடையில் செருகியிருந்த குறுவாளைக் கொண்டு வில்வலனுடைய, இடைய பெருவாளுடன் போரிடுவது தற்கொலைக்குச் சமமென்று அவள் கருதியதாலும், அரம்பத்தில் ஏற்பட்ட அச்சம் அவளைக் கவ்வியே நின்றது.

(தொடரும்...)

## உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு - பகுதி2

ஜேஜூ தீவினை தென் கொரியாவின் ஹவாய் என்று சுற்றுலாப் பயணிகள் வர்ணிக்கிறார்கள். கொரியர்கள் செல்லமாக சாமட்டோ என அழைக்கின்றனர். சாம்டடோ என்றால் இயற்கை எழிலின் உச்சம் என்று பொருளாம்.

காற்று, பாறைகள், பெண்கள் போல எல்லையற்ற அர்த்தம் பொதிந்தவை என்றும் ஜேஜூவை வியக்கிறார்கள். ஜேஜூவில் உள்ள கற்பாறைகளில் சில சிற்பங்களை வடித்துள்ளார்கள். ஒரு மனிதன் தலைக்கவசம் அணிந்தபடி காட்சியளிக்கும் ஆளுயர சிலை ஒன்று காண்பவர்களை கவரும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் தற்போது நாற்பதுக்கும் மேற்பட்ட சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கொரிய மொழியில் அந்த இடத்தை தல்ஹராபாங் என அழைக்கிறார்கள். பாதைகளின் பாட்டன் என்று அதற்குப் பொருள். கி.பி பதினோராம் நூற்றாண்டில் இந்த இடத்தை மங்கோலியர்கள் தங்கள் குதிரைப் படையினருக்குப் பயிற்சி அளிக்கும் களமாகப் பயன்படுத்தினர். பின்னர் வந்த ஆட்சியாளர்கள் சிறைக் கைதிகளை அடைத்து வக் கம் கொட்டடியாக ஆக்கினர்.

கொரியப் போரின் போது அகதிகள் தஞ்சமடையும் இடமாக ஆனது. இந்தத் தீவில் 200 இற்கும் மேற்பட்ட அபூர்வப் பறவையினங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட பூச்சியினங்கள், நீர் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன.



ஜேஜூ தீவில் வாழும் பூர்வ குடி மக்கள் தாங்கள் தேவ குமாரர்களின் வாரிசுகள் என நம்புகிறார்கள். அதற்கு ஆதாரமாக பரம்பரையாக சொல்லப்படும் நாட்டுப்புறக் கதை ஒன்றை சொல்கிறார்கள்.

முன்னொரு காலத்தில் தாம்னா என்கிற சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த அரசன் ஒருவனுக்கு மூன்று அழகான மகள்கள் இருந்தனர். அவர்கள் எல்லா வளமும் நலமும் பெற்று வளர்ந்து திருமண வயதை அடைந்த போதும், அவர்களுக்குத் திருமணம் கைகூடவில்லை. இதனால் அந்த மன்னன் மனம் வெதும்பி, உடல் நலிந்து போனானாம்.

அவனது வாட்டத்தைக் கண்ட அவனது ஆட்சிக்கு உட்பட்ட வனத்தில் வசித்து வந்த சிங்கம் ஒன்று அவனுக்காக வேண்டிக் கொண்டு ஒரு முட்டை வடிவ பெட்டியினுள் தன்னை அடைத்துக் கொண்டு இந்த மலைத் தொட ருக்கு தேவகுமாரர்கள் வரு வார்கள்" என்றறிந்து இங்கு வந்து அவர்களுக்காகக் காத்திருந்ததாம். எதிர்பார்த்தது போலவே மூன்று தேவகுமாரர்கள் வந்தனர். பெட்டிக்குள் இருந்த சிங்கத்திடம் விபரம் அறிந்தனர். உடனே தாம்னா சாம்ராஜ்யத்தை அடைந்து அந்த இளவரசிகளை மணம் புரிந்தனராம். அவர்கள் பின்னர் தாங்கள் வசிப்பதற்காக ஜேஜூ தீவினை உருவாக்கி அருவி, நதிகள், பூங்காக்கள், உயிரினங்களை படைத்தனராம்.

எனவே அந்த தேவகுமாரர்களின் வழிவந்தவர்கள் எனத் தங்களை பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்கள். கதை கற்பனை தான் என்றாலும் ஜேஜூவின் வனப்பு மிக்க சூழல், தட்பவெப்பம் உண்மையில் தேவ குமாரர்களின் வாழ்விடமாகவே இருக்கின்றதாக கருதித்தான் இதனை உலக இயற்கை அதிசயங்களில் ஒன்றாக தேர்வு செய்திருக்கின்றனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

322

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## ஆரோக்கியமாக வாழ்வதற்கு

(சென்றவாரத் தொடர்ச்சி..)

**நட..நட.. நட... நடராஜா.**

நடக்கவேண்டும். சிலர் நடப்பதையே மறந்து விட்டார்கள். வீட் டிற்கு வெளியே வாகனம், நேராக அலுவலகம், உட்கார்ந்து கொண்டே வேலை, பின் வீடு, TV, தூக்கம், மிகக் குறைவான நடை, உடல் நலம் சீக்கிரம் பாதிப்படையும்.

முன்பு நமது கிராமங்களில் வாங்க, வாங்க, எந்த வண்டியில் வந்தீங்க என கேட்பார்கள். அதற்கு வந்தவர், நடராஜா வண்டியில தான் வந்தேன், அது தானே நம்மது என்பார். அந்தக் காலத் திலே நடை அதிகம். எனவே ஆரோக் கியம் நன்றாக இருந்தது.

ஆம், நடராஜா வண்டி எனச் சொல் லக்கூடிய எமது கால்கள் சரியாக இருந் தால் மட்டுமே நாம் நடமாட முடியும் என்ற மாபெரும் உண்மையை எப் போதும் நினைவில் கொள்வோம்.

கால்கள் சரியாக இருந்தால் மட்டுமே நமது வாழ்க்கை நகரும். இல்லை யெனில் முடங்கும். தயவு செய்து கால் களை உற்றுப்பாருங்கள். விரல்கள், விரல் இடுக்குகள், பாதங்கள், என உற்றுப் பாருங்கள்.

நம் உடல் முழுவதையும் தாங்கிக் கொள்கிற, நம்மை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்துகின்ற, இந்தப் பாதங்களைப் பாருங்கள்.

சிலர் பாதங்களில் வெடிப்பு களோடு இருப்பார்கள். நடப்பது, நிற்பது என எல்லாம் சிரமமாகும். சிலர் கால் ஆணி எனப்படும் துயரோடு இருப்பார்கள். வலி சொல்ல இயலாது இருக்கும். இதுபோல் ஆகும் முன் தயவு செய்து கால்களைக் கவனிப்போம்.

**கால்களைப் பாதுகாக்க எளிய வைத்தியம்.**

இரவு தூங்கப் போவதற்கு முன் வெதுவெதுப்பான நீரில் கல்உப்பு, மஞ்சள் தூள், இருந்தால் எலுமிச் சைச் சாறு கலந்து அவற்றில் கால் களை கால் மணிநேரம் வைத்திருங்கள். சுகமாக இருக்கும். பின் மெதுவாக தேய்த்து விடுங்கள். மசாஜ் செய்வது போல நீங்கள் கவனிக்க ஆரம்பிக்க, பித்த வெடிப்போ, கால் ஆணியோ குண மடையும்.

நடங்கள். தயவுசெய்து நித்தமும் ஒரு 30 நிமிடம் நடவுங்கள். பூமி யில் உங்கள் பாதம் படும் அழகை, உங்க ளுக்கும் இந்தப் பூமிக்குமான தொடர்பை, நெருக்கத்தை உணர் ந்து, ரசித்து அமைதியாக இயற் கையை ரசித்து, நேசித்து நடவுங் கள்.

நடந்து போகும் தூரங்களுக்கு எல் லாம் மோட்டார் ஸ்சக்கிள், கார் எனத் திரியாமல் நடக்கலாம்.

நீங்கள் நடக்க சோம்பேறித்தனம் கொண்டால் பிற்காலத்தில் நடக்க இயலாத சூழல் கூட உருவாகும். ஆத லால் நடவுங்கள். உங்கள் உடம்பு சொல்லும் அளவு நடவுங்கள். நடப்பது நல்லது. அதிலும் செருப் பில்லாமல் மண்தரையில், புல் வெளி யில் நடப்பது இன்னும் நல் லது.

நடப்பதை இயல்பாக்கிக் கொள் வோம். உடல்நலம் காப்போம்.

**சுய ஒழுக்கம்**

1.தொடர்ச்சியாக இரண்டு முறை க்கு மேல் யாருக்கும் தொலை பேசியில் அழைப்பு எடுக்காதீர்கள். அவர்கள் முக்கிய வேலையாக இருக்கலாம், அல் லது பேச முடியாத சூழ்நிலையில் இருக் கலாம்.

2.உணவு விடுதியில் சாப்பிட லாம் என நண்பர் உட்பட யார் அழைத் தாலும், Menu card இல் costly யாக உள்ள எதையும் Order செய்யாதீர்கள். அழைத்தவ ரையே உங்கள் விருப் பப்படி Order செய்யச் சொல்லலாம்.

3.தர்மசங்கடமான இது போன்ற கேள்விகளை தவிர்க்கலாம். இன்னும் கல்யாணம் ஆகவில்லையா? குழந் தைகள் இல்லையா? இன்னும் சொந்த வீடு வாங்கவில்லையா? ஏன் இன்னும் Car வாங்கவில்லை? இது நமது பிரச் சினை இல்லைத்தானே!

4. தானியங்கிக் கதவை திறக்க நேர்ந்தால் பின்னால் வருபவர் ஆணோ, பெண்ணோ, சிறியவரோ, பெரியவரோ அவர்கள் வரும்வரை மூடாமல் பிடித்திருப்பது அவர்களை சமூகத்தில் பொறுப்புள்ளவர்களாக மாறச் செய்யும்!

5.நண்பருடன் Taxi இல் சென் றால் இம்முறை இயலாவிட்டால் மறுமுறை நீங்கள் காசு கொடுத்து விடுங்கள்.

6.மற்றவர்களின் கருத்துக்கு மதிப் பளியுங்கள்.

7.அடுத்தவர்கள் பேசும்போது இடை மறிக்காதீர்கள். அவர்கள் கூறுவதை செவிமடுங்கள். நல்ல வற்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

8.நீங்கள் கிண்டலடிப்பதை சம் பந்தப்பட்டவர் ரசிக்கவில்லை என் றால், மீண்டும் அதைச் செய்து விடாதீர்கள். அவரை உற்சாகப் படுத்துங்கள். உங்கள் மதிப்பை அது மேம்படுத்தும்.

9.யார் உதவினாலும் பாரபட்ச மின்றி நன்றி சொல்லுங்கள்.

10.பொதுவில் புகழுங்கள். தனி யாக இருக்கையில் குறைகளை சுட்டிக்காட் டலாம்.

11.உடற்பருமனை ஒருபோதும் கிண் டலடிக்காதீர்கள்.

"நீங்கள் பார்க்க Smart ஆக, Cute ஆக இருக்கிறீர்கள் என்று கூறுங்கள். உடல் எடை குறைக்க அவராகக் கேட்டால் ஒழிய நாம் அறிவுரை வழங்கக் கூடாது.

12.யாராவது அவர்கள் Photo வைக் காட்ட Phone ஐக் கொடுத் தால் Gallery இல் இடது வலதாக தள்ளிப் பார்க் காதீர்கள். அடுத்து என்ன இருக்கும் என்று உங்க ளுக்குத் தெரியாது.

13. யாரும் தனக்கு Doctor Appointment இருக்கிறது, போக வேண்டும் என்றால், உடனே என்ன நோய்க்கு என்று கேட்டு விடாதீர்கள். அவர்களின் தனிப்பட்ட நோயை மற்றவர் களுக்கு தெரியக் கூடாது என்று கருத லாம். விரைவில் நலமடைவீர் கள் என்று நம்புகிறேன் என்று கூறலாம்.

14. நண்பர்களிடமோ யாரிடமோ நேரில் சந்தித்துப் பேசும்போது Phone ஐ நோண்டிக்கொண்டிருக்காதீர்கள்.

15. கேட்டால் தவிர அறிவுரை வழங் காதீர்கள்.

16. நீண்ட நாட்கள் கழித்து யாரையும் சந்தித்தால், அவர்களின் சம்பளம், வயது ஆகியவற்றைக் கேட்காதீர்கள்.

17. தெருவில் யாரையாவது சந்திக்க நேர்ந்தால், கறுப்புக்கண்ணாடி அணிந் திருந்தால் கழற்றிவிட்டுப் பேசுங்கள். கண்பார்த்துப் பேசுதல் நம்பிக்கைக்கு நல்லது.

18. எவரதும் தனிப்பட்ட பிரச்சினை யில் நேரடியாக வலியப் போய்த் தலை யிடாதீர்கள்.

**குளிக்கும் போது கவனிக்க வேண்டியவை.**

நம்மில் ஆரோக்கியமான பலர் திடீ ரென குளியலறையில் விழுந்த பிறகு பக்கவாதம் மற்றும் மய்க்கம் போன்ற கவலையான செய்திகள் பலவற்றை நாம் அடிக்கடி கேள்விப் படுகிறோம்.

ஓர் ஆரோக்கியமான வாழ்க்கை முறை என்ற கலந்துரையாடல் வகுப்பில் பங்கேற்றபோது தேசிய விளையாட்டு கவுன்சிலின் பேராசிரியர் கூறியவை:

- குளிக்கும் போது முதலில் தலை முடியைக் கழுவ வேண்டாம் என்று அறிவுறுத்தினார்.

நாம் குளிக்கும்போது முதலில் உட லின் மற்ற பாகங்களை கழுவ வேண் டும்.

ஏனென்றால், தலை ஈரமாகவும் குளிராகவும் இருக்கும்போது, தலையை சூடாக்க இரத்தம் நம் தலையை நோக்கிப் பாயும்.

அச்சமயத்தில் இரத்தம் பயணிக் கக்கூடிய நாடிகள் குறுகினால், அது இரத்த நாடிகளைச் சிதைப்பதற்கு வாய்ப் புள்ளது.

நாம் முதலில் குளிக்கும்போது எதில் இருந்து நீர் ஊற்றத் தொடங்கி பின் தலைக்கு எப்படி நீர் ஊற்ற வேண்டும் என்பதை வரிசைப் படியாக கீழே குறிப் பிடப்பட்டுள்ளது.

1. பாதத்தின் அடிப் பகுதியிலிருந்து தொடங்குகிறது.
2. பாதத்திற்கு மேல் உள்ள முழங் கால் பகுதி.
3. தொடைகள்.
4. அடிவயிறு.
5. தோள்பட்டை.
6. 5-10 விநாடிகள் நீர் ஊற்றாமல் சிறு இடைவேளை.

இச்சமயத்தில் நம் உடலில் இருந்து நீராவி அல்லது காற்று நிரம்பி வழிவது போல் உணருவோம், பின்னர் வழக்கம் போல் தலைக்கு நீரூற்றிக் குளிக்கவும். இதனைத்தான் முன்னோர்கள் படிநீர் ஆடு என்பார்கள்.

முதலில் நேரடியாக தலைக்கு நீர் ஊற்றுவது என்பது சூடான நீரில் நிரப் பப்பட்ட கண்ணாடிக் கிளாஸில், குளிர் ந்த நீரை நிரப்புவதற்கு ஒப்பாகும். கண்ணாடி வெடிப்பு ஏற்பட்டு உடை யும் நிலை வரும். !!!

இதேபோன்ற நிகழ்வு நம் உடலில் ஏற்பட்டால் ... என்ன நிலை உரு வாகும்?

பொதுவாக நமது உடல் வெப்ப நிலை சூடாகவும், தண்ணீர் குளிரா கவும் இருக்கிறது. எனவே முதலில் நாம் உடலில் அல்லது தலையில் நேரடியாக நீர் ஊற்றும்போது, இரத்த நாடிகள் சிதைவதால் இரத்தக் கசிவு போன்ற அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இதனால்தான் மக்கள் திடீரென குளியலறையில் விழுவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

தவறான குளியல் முறையின் கார ணமாகவே, பலருக்கு பக்கவாதம் அல் லது ஒற்றைத் தலைவலி ஏற்படுகிறது.

இந்த பாதம் முதல் தலைவரை நீரூற்றி குளிக்கும் முறையானது அனைத்து வயதினருக்கும் பொருத் தமானது.

அதிலும் குறிப்பாக நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் மற் றும் ஒற்றைத் தலைவலி/ தலைவலி உள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றது.

**குளிர்ந்த நீரில் குளிப்போம்! சூடான நீரை குடிப்போம்!**

**நோயற்ற பெரு வாழ்வு வாழ் வோம்**

இறுதியாக நீங்கள் ஒருவரைப் பற்றி மற்றொருவரிடம் கூறும் போது சோக்கி ரட்டீஸ் என்ன சொன்னார் என்பதைப் பாருங்கள். 'ஒருமுறை சோக்கிரட்டீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து அவருடைய நண் பரைப் பற்றி ஏதோ கூற முயன்றார்.

உடனே சோக்கிரட்டீஸ் அவரிடம், என் நண்பரைப் பற்றி என்னிடம் கூற விரும்பினால் அதற்கு முன் 3 கேள்வி களைக் கேட்பேன். மூன்று கேள் விக்கும் ஆம் என பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றிக் கூறலாம் என்றார்.

சோக்கிரட்டீஸ் முதல் கேள்வியைக் கேட்டார்.

அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்துவிட்டு தான் அவரைப் பற்றி கூறுகிறாயா ? என்று கேட்டார். இல்லை எனப்பதில்சொன்னார். அவரைப் பற்றிய நல்ல விடயத்தைக் கூறப்போகிறாயா? என்று இரண்டாவது கேள்வியைக் கேட் டார்.இல்லை எனப் பதில் சொன்னார்.

அந்த நண்பரைப் பற்றி என்னிடம் கூறினால் யாராவது பயனடைவார் களா? என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்டார். இதற்கும் இல்லை என்றே பதில் வந்தது. யாருக்கும் பயனில்லாத, நல்ல விடயமுமில்லாத, நேரடியாக நீங் கள் பார்க்காத, என் நண்பரைப் பற்றிய சம்பவத்தை தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள் என்றார். எனவே வேண் டாத விடயங்களைப் பிறரிடம் கூறு வதைத் தவிருங்கள்.

(முற்றும்.)

**வைத்திய கலாநிதி.**
**தம்பிப்பிள்ளை**
**பேரானந்தராசா**
**பொது வைத்தியநிபுணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பையும் அமைதியையும் பகிர்ந்து கொள்வதே

# நத்தார் பண்டிகையின் சிறப்பம்சமாகும்

## நத்தார் வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகில் அமைதியின் செய்தியை எடுத்துரைத்து, மனிதர்கள் அனைவரையும் தீமையிலிருந்து காப்பாற்றுவதற்காக உலகிற்கு வந்த சமாதானத் தூதரின் பிறப்பு, உலகம் முழுவதும் நினைவுகூரப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நத்தார் பண்டிகை வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

அன்பு, சமாதானம், சகோதரத்துவம் என்ற கருப்பொருளைக் கொண்ட உன்னதமான நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின்



சமயப் பண்டிகை மட்டுமல்லாது இனம், மதம், குலம், நிறம், சிறியவர்கள், பெரியவர்கள் என்ற பாகுபாடின்றி உலகம் முழுவதிலுமுள்ள எண்ணற்ற மக்களால் கொண்டாடப்படும் கலாசார விழாவாகும்.

இயேசுநாதரின் கோட்பாடு அன்பு. எனவே, நத்தார் தினத்தை அமைதியின் பருவம். அன்பையும் அமைதியையும் பகிர்ந்துகொள்ளும் பண்டிகையான நத்தார் என்ற உண்மையான கிறிஸ்தவப் பிறப்பு, அமைதியான, அன்பான இதயங்களுக்கு மட்டுமே என்பது யதார்த்தமாகும். எனவே, நாம் எப் போதும் உண்மையான நத்தார் தினத்தைக் கொண்டாடுவோம்.

ஆகவே, இந்த வருட நத்தார் பண்டிகையை நாம் இயேசுவை சந்திக்கும் நத்தார் பண்டிகையாக ஆக்குவோம் என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (க-7)


### சொர்க்கம் திருமண சேவை

I 1977 லண்டனில் வசிக்கும் சித்திரை நட்சத்திர மணமகனிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.
II 1978 அமெரிக்காவில் வசிக்கும் மக நட்சத்திர மணமகனிற்கு உள்நாட்டில் படித்த மணமகள் தேவை.
III 1993 கனடாவில் வசிக்கும் மகர நட்சத்திர மணமகனிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.
IV 1992 கனடாவில் வசிக்கும் ரேவதி நட்சத்திர மணமகளிற்கு உள்நாட்டில் படித்த மணமகன் தேவை.

தொடர்பு கொள்ள : சொர்க்கம் திருமணசேவை
கனடா : 0014166661855
யாழ்ப்பாணம் : 077 200 0230
(சி-5651)

### உடனடி சேவை

A/C, fridge, washing machine, air cooler, water heater தரமான உதிரிப்பாகங்களுடன் Spot Service
076 034 0301
(சி-5652)


# புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மாநாட்டுக்கு கோடீஸ்வரர் பில்கேட்ஸுக்கு அழைப்பு

## ஜனாதிபதி பரிந்துரை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இலங்கையில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மாநாட்டுக்கு உலகப் புகழ்பெற்ற வர்த்தகரான பில்கேட்ஸுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்பாடு செய்யுமாறு காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன ஆகியோருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ருவான் விஜயவர்தன ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடிய போது இந்





தத் தீர்மானம் எட்டப்பட்டது.

இதன்போது உலகில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஈடுபட்டுள்ள பல தலைவர்களை இலங்கைக்கு அழைக்குமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த மாநாட்டுக்கு வரும் முக்கிய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்த திட்டமிட்டுள்ளதாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார். (க-7)

## கொரோனா எழுமாற்று பரிசோதனை எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாளாந்தம் பெற்றுக்கொள்ளப்படும் கொவிட் மாதிரிகள் தொடர்பான ஆய்வுகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தற்போது முன்னெடுக்கப்படும் எழுமாற்று பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்ரகுப்த தெரிவித்தார்.

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதாக வெளியாகும் தகவல்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்ரகுப்த தெரிவித்தார். (க-7)

# இராசிபலன்

25.12.2022
மார்கழி 10, ஞாயிற்றுக்கிழமை
துதியை பிற்பகல் 12.02 மணி வரை

உத்தராடம் முன்னிரவு 11.39 மணிவரை
சுபநேரம் -09.26-10.56 மணிவரை
இராகுகாலம் - 04.56-06.26 மணிவரை

நத்தார்ப் பண்டிகை
சந்திராஷ்டமம் - மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெறுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தன்னம்பிக்கை உயர்வடையும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத சந்தோசங்கள் குடிகொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கும்பம்** தேவையற்ற மனக்குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, சுப விரயங்கள் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**கன்னி** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** உங்களின் வார்த்தையை மற்றவர்கள் கேட்டு நடப்பர், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்களின் சந்திப்பு கைகூடும்.

**மீனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

பணிவில்லாத அமுத பாராட்டுப் பெறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் தமிழர்கள் உயிர் வாழ்வதை உறுதி செய்யுங்கள்

# பைடனுக்கான தமிழர் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் வனப் பாதுகாப்புத் துறைகளை பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனப்படுத்த வேண்டும் என அமெரிக்காவின் பைடனுக்கான தமிழர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

இவ் விடயம் தொடர்பில் அந்த அமைப்பு அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கனுக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

வனப்பாதுகாப்பு மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் தமிழ் பிரதேசங்களில் இரண்டு அமைச்சரவை அமைச்சர்களின் மேற்பார்வையில் நில அபகரிப்பு மற்றும் இனச் சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

இந்தநிலையில் இலங்கையில் தமிழர்கள் உயிர் வாழ்வதை உறுதி செய்வதற்கும் அமைதியைப் பாதுகாப்பதற்கும் தமிழர்களுக்கு பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட இறையாண்மையுள்ள அரசு ஒன்று தேவையாகும் என அந்தக் கடிதத்தில் பைடனுக்கான தமிழர்கள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் அனுர மனதுங்க, வனத்துறையின் பணிப்பாளர் கே.எம்.ஏ. பண்டார ஆகியோரை பயங்கரவாதிகளாக பட்டியலிட வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

தெற்கில் இருந்து மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் தமது மூதாதையர்களின் விளைநிலங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். பல நூற்றாண்டுகள் பழமையான இந்துக் கோவில்களும் அகற்றப்பட்டுள்ளன.

அந்த இடங்களில் புத்த கோவில்கள் எழுப்பப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட முயற்சிகளால் தமிழ் மக்களையும் அவர்களின் கலாசாரத்தையும் அழிக்கும் முயற்சியினால் தமிழர்கள் தங்கள் சொத்துக்களையும் கலாசார பாரம்பரியத்தையும் நாளுக்கு நாள் இழக்கிறார்கள் என பைடனுக்கான தமிழர்கள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (க-7)

# கலாநிதி பட்டப்படிப்பிற்கு ஊதியமில்லாத விடுப்பு

(கொழும்பு)

அரச அதிகாரிகளின் பணி மூப்பு மற்றும் ஓய்வூதியம் பாதிக்காத வகையில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு ஊதியமற்ற விடுமுறை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் கலாநிதிப் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டம் பெறுவதற்கு அவர்களின் பணிமூப்பு மற்றும் ஓய்வூதியம் பாதிக்கப்படாமல் 3 வருடங்கள் வரை சம்பளமில்லாத படிப்பு விடுப்பு வழங்க முடியும் என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (க-7)



# கட்டடத் துறைக்கான வற்வரி நீக்கம்

(கொழும்பு)

பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வழங்கப்பட்ட வரி விலக்குகளை அரசாங்கம் மீளாய்வு செய்து வருகிறது.

நிதியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிஎ சேனாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி முதல் வற் வரியை 15 சதவீதமாக அரசாங்கம் உயர்த்திய நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் கட்டடத் துறைக்கு வழங்கப்பட்ட வரி விலக்கு நீக்கப்பட்டவுள்ளது.

இந்நிலையில் வற் வரியின் திறனுக்கும் செயற்திறனுக்கும் இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 6 வீதமான பரந்த இடைவெளி இருப்பதாக உலக வங்கியின் தரவுகளை மேற்கோள்காட்டிய அவர் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தற்போதைய வற் விலக்குகளை நீக்குவதன் மூலம் அரசாங்கம் குறைந்தபட்சம் 200 பில்லியன் ரூபாவை சேகரிக்க முடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

ஏலவே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், கையடக்கத் தொலைபேசிகள், கடல் உணவுகள் மற்றும் பதப்படுத்தப்படாத இறால்கள் உட்பட பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வற் வரி விலக்கு அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## சூடு பிடிக்கும் தேர்தல் களம்

# பாரிய கூட்டணிக்குத் தயாராகும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் என ஆறு தரப்பினர் ஒன்றிணைந்து மிகப் பெரிய கூட்டணியை அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதன் ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த கூட்டணியை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, உத்தர லங்கா சபாகய, சுதந்திர மக்கள் காங்கிரஸ், அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையிலான சுயாதீன அணியினர் இணைந்து இந்தக் கூட்டணி அமைக்கப்பட உள்ளது.

இந்த அணிகளில் 12 அரசியல் கட்சிகள் இருக்கின்றன.

விரிவான கூட்டணியாக வலுவாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிட்டு, மக்களின் பிரச்சினைகளுக்கு பொது இணக்கப்பாட்டுடன் தீர்வு காண்பது, புதிய கூட்டணியின் நோக்கம் எனவும் அந்த அரசியல் முக்கியஸ்தர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

# புடைவையில் கழுத்து இறுகி 12 வயது சிறுவன் பலி

(கொழும்பு)

ஹப்புத்தளை - பிரதமலை தோட்டப் பகுதியில் வீடொன்றில் புடைவையில் கழுத்து சிக்கி 12 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி இரவு குறித்த சிறுவன் தனது சகோதரர்களுடன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது இரண்டு குழந்தைகளை உறங்க வைப்பதற்காக வேறு அறைக்கு அழைத்துச் சென்ற தாய், திரும்பி வந்து பார்த்தபோது, 12 வயது சிறுவன் தொட்டில் கட்டப்பட்டிருந்த புடைவையில் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கிடந்ததைக் கண்டுள்ளார்.

எனினும் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-7)

# அரசியல் தீர்வை வரவேற்கிறேன்

## முன்னாள் ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வை காணும் நோக்குடன் தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வ கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ள பேச்சை வரவேற்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் தமிழ்க் கட்சிகளுடன் பேசி அரசியல் தீர்வை விரைந்து காணத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், அது கைகூடவில்லை.

தமிழ்க் கட்சிகளும் என் மீது நம்பிக்கை வைக்கவில்லை. பழையதைப் பேசுவது இப்போது உகந்ததல்ல. அனைவரும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர். அதனால்தான் அவரை நான் பிரதமராக நியமித்தேன். ஜனாதிபதிப் பதவியிலிருந்து நான் விலகியவுடன் அவரை பாராளுமன்றம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் என்று நினைத்தேன். நான் நினைத்ததைப்போல அது நடந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வகட்சிகளுடன் பேசி அரசியல் தீர்வைக் காண்பார் என்று நம்புகின்றேன். அது நடந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் கட்சிகள் முரண்பட்டு நிற்காமல் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அவரின் கருத்து நியாயமான கருத்து. எனவே, கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்” என கோட்டாபய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

## இலவச மண்ணெண்ணெய் விநியோகம்

(கொழும்பு)

சீனாவால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெயில் 7 மில்லியன் லீற்றரை நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனை நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பில் விவசாய அமைச்சின் அதிகாரிகளுக்கிடையில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

சீனாவினால் 10.6 மில்லியன் லீற்றர் மண்ணெண்ணெய் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் எஞ்சிய தொகை மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உங்களை கடவுளிடமிருந்து விலக்கி வைக்கும் எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள்.
>
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இயேசுபிரானின் போதனைகளை பின்பற்றுவதே நமது கடன்

இன்று நத்தார் பண்டிகை. உலகம் முழுவதும் இயேசு பாலகனின் பிறப்பை கொண்டாடுகின்ற புனிதமான நாள்.

மீட்பராக இந்த உலகில் பிறப்பெடுத்த இயேசுபிரான் தன்னைப் போல் மற்றவர்களையும் நேசித்தவர்.

அதனாலன்றோ உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற தத்துவத்தை அவர் இந்த உலகுக்கு உரைத்தருளினார்.

இயேசுபிரானின் பிறப்பு பாவப்பட்ட மனித குலத்தை மீட்பதற்கானது.

பாவம் என்பது நம் செயலில் உள்ளது.

பாவத்தினின்றும் மனித குலம் மீள வேண்டுமாயின், இயேசுபிரான் போதித்த அறத்தை – நீதியை பின்பற்றுவதே ஒரே வழியாகும்.

ஆம், மனித குலத்தின் மீட்பராக இவ்வுலகில் பிறப்பெடுத்த இயேசுநாதர் தன்னைத் தூற்றியவர்களையும் மன்னித்தவர். மன்னிப்பு மனித வாழ்வின் அடிப்படை என்பதை தன் மூலம் இந்த உலகுக்கு எடுத்தியம்பியர்.

ஜீவகாருண்யத்தின் அவசியத்தை வலியுறுத்திய அவரின் போதனைகள் எல்லோரையும் நேசிக்க வேண்டும் என்பதேயாகும்.

இங்குதான் நேசித்தல் என்பது அன்பின் வெளிப்பாடு.

ஆக, மனிதர்கள் அன்பு மிகுந்தவர்களாக இருக்கும்போதுதான் அவர்கள் மற்றவர்களுக்கு உதவி செய்யவும் தம்மைப்போல் மற்றவர்களை நேசிக்கவும் கூடியவர்களாக இருப்பர்.

ஆக, இயேசு பாலகனின் பிறப்பை ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வதன் உள்ளார்ந்தம் அவரின் போதனைகளால், இந்த உலகம் மீட்சி பெற்றது. மனுக்குலம் பாவத்தினின்றும் கடைத்தேறியது என்பதை அறிவிப்பதாகும்.

ஆனால் சம காலத்தில் நத்தார் பண்டிகை என்பது வர்த்தகத்தின் வரவேற்புப்போல மாறிவிட்டதுதான் வேதனைக்குரியது.

ஆம், மீட்பராக – மேய்ப்பராக பிறப்பெடுத்த இயேசு பாலகனின் பிறப்பு நாள் என்பது அன்பு மயமானது. அகிம்சை வழியில் பயணிப்பதற்கானது. பகையை மறந்து மன்னிப்பதற்கானது. மற்றவர்களுக்கு சேவை செய்வதற்கானது. ஏழை மக்களுக்கு உதவுவதற்கானது.

இதுவே இயேசு பாலகனின் பிறப்பும் அவரின் போதனையுமாகும்.

இருந்தும் இன்றைய நடைமுறையில், நத்தார் என்பது கொண்டாட்டம், களியாட்டம் வர்த்தக நோக்கம் ஆடல் பாடல் என்பதாக மாறிவருகிறது. இஃது ஏற்புடையதன்று.

உண்மையில் இயேசு பாலகனின் பிறப்பை வழிபாடு செய்கின்ற நத்தார் என்பது எங்கள் வாழ்க்கையில் நாம் விட்ட தவறுகளுக்கும் பாவங்களுக்கும் ஆண்டவரிடம் மன்னிப்புப் பெறுவதும் இனிவரும் காலங்களில் இறைவா! உன் கட்டளையை ஏற்று அதன்படி நடப்போம் என்று சத்தியம் செய்வதுமாகும்.

ஆகவே, இயேசுபிரான் நமக்கருளிய போதனைகளை பின்பற்றி எங்கள் வாழ்வை செம்மைப்படுத்துவோம் என இந்தப் புனித மான நாளில் உறுதி கொள்வோம்.

அதுவே நத்தார் திருநாளின் பொருளும் பயனுமாகும்.

# கட்சிகளின் தனிப்பட்ட நிலைப்பாட்டால் பேரவைக்கான உறுப்பினர் நியமனம் தாமதம்

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனத்தை துரிதப்படுத்துமாறு சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

ஒவ்வோர் அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட நிலைப்பாட்டினால் பேரவைக்கான உறுப்பினர் நியமனம் தாமதப்படுத்தப்பட்டுள்ளது என நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவை உறுப்பினர் நியமனம் தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரினால் சான்றுரைப்படுத்தப்பட்டதன் பின்னர் நீதிச் சேவை ஆணைக்குழுவை தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான புதிய நியமனம் இடம்பெறும் வரை ஆணைக்குழுக்களின் தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதில் தலைவராகவும் உறுப்பினராகவும் பதவிவகிக்க முடியும்.

அரசியலமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனம் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளதை பல்வேறு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்கள். சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரிடம் உறுப்பினர் நியமனத்தின் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனத்தை துரிதப்படுத்துமாறு இவர்களிடம் வலியுறுத்தியுள்ளேன். அரசியல் கட்சிகள் தனிப்பட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி, தமது கட்சியின் பரிந்துரைகளை முன்வைக்காமல் இருக்கின்றன.

21ஆவது திருத்தம் முழுமையாக செயற்படுத்தப்பட வேண்டுமாயின், அரசியலமைப்பு பேரவை விரைவாக ஸ்தாபிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (4,7)

# மனைவியை கொடூரமாக கொலை செய்த கணவன்

அம்பலாந்தோட்டை - பெரகம பகுதியில் பெண்ணொருவர் தமது கணவரால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

ஆயுதம் ஒன்றினால் குறித்த பெண்ணின் கழுத்தில் தாக்குதல் நடத்தப்பட்டு இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 50 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (4-7)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இச் சம்பவம் எல்பிட்டிய, யக்கடுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் இரவு வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த நபர் எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் 26 வயதுடைய ஒருவரே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் அவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4,7)

# பட்டாசு வெடிக்கும் போது கவனமாக செயற்படவும்

பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிக்கும் போது பாதுகாப்பாக இருக்குமாறு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் தேசிய பயிற்சி தாதியான புஷ்பா ரம்யானி பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதால், அது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார். (4,7)

# மீனவர்கள் இன்று கடலுக்கு செல்ல வேண்டாம்

## வளிமண்டலவியல் திணைக்களம்

வங்காள விரிகுடாவின் தென்மேற்கு கடற்பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் நாட்டை அண்மித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் மாலை வேளையில் இடைக்கிடையே மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சில பகுதிகளில் 75 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில், இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் திணைக்களம் கூறியுள்ளது.

இன்று நாட்டின் அநேகமாக பகுதிகளில் பலத்த மழை பெய்யலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தாழமுக்கமானது இன்று நாட்டினூடாக நகர்வதால் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரை மழை பெய்யக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல பகுதிகளில் பலத்த காற்றும் வீசும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தற்போது நிலவும் மழையுடனான வானிலையால் வடக்கு, கிழக்கு கடற்பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (4,7)

# மின்கட்டணம் அதிகரிப்பு சிற்றுண்டிச்சாலைகள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியில் உள்ள சகல பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைகளையும் மூடவேண்டிய நிலை ஏற்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபைக்கு நட்டம் என குறிப்பிடும் மின்சாரத் துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர மின்சார சபை நட்டமடைவதற்கான காரணத்தை பகிரங்கப்படுத்தவில்லை.

நாட்டு மக்களுக்கு இலவசமாக மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாட்டு மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மின்சார கட்டணம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தை சிக்கனமாக பாவித்தாலும், குறைந்தபட்ச மின் கட்டணம் 5000 ரூபாவாக காணப்படுகிறது.

இதனால் நாட்டு மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மின்கட்டண அதிகரிப்பால் பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலை கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய விலைக்கமைய பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலை உணவுப் பொருட்களின் விலைகளை தீர்மானித்துக் கொள்ள முடியாதளவு நெருக்கடி உள்ளது என மேலும் தெரிவித்தார். (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் கடலட்டைப் பண்ணைகள் எதற்கு?

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்க சமாசம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் எதற்கு இருக்கின்றது என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டவிரோத கடலட்டைப் பண்ணை அமைப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த திணைக்களத்திற்கு நாங்கள் பல கடிதங்களை எழுதிய போது அதற்கு எவ்வித பதிலையும் அவர்கள் இதுவரை அளிக்கவில்லை.

கடலட்டைப் பண்ணை தொடர்பான சந்தேகங்களும் கேள்விகளும் கடற்றொழிலாளர்களுக்கு எழுந்த நிலையில் அது தொடர்பான முறைப்பாடுகள் சம்மேளனத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

அதனடிப்படையிலேயே கடலட்டைப் பண்ணைகளை மட்டுப்படுத்தி சிறு தொழிலாளர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மீன் உற்பத்தியாகும் பிரதேசங்களில் கடலட்டைப் பண்ணை அமைக்கக்கூடாது என்றும் கோரினோம்.

அனுமதியைப் பெற்று கடலட்டைப் பண்ணையில் ஈடுபடடால் அதில் எமக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

2023 ஜனவரிக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் நாங்கள் அனுப்பிய கடிதத்திற்கு பதில் அனுப்பிவிட்டால் ஜனாதிபதி உட்பட சகல வெளிநாட்டு தூதரகங்களுக்கும் இது தொடர்பாக மகஜர் கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-7-33)

### மாணவர் கௌரவிப்பு

(மன்னார்)

மன்னார் வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பேசாலை புனித மரியாள் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு மற்றும் ஒளிவிழா நிகழ்வு பாடசாலை அதிபர் செபஸ்டியான் ராஜேஸ்வரன் பச்சேக் தலைமையில் நேற்று இடம்பெற்றது. 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள், ஏனைய கல்விச் செயற்பாடுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் உட்பட 250 பேர் சான்றிதழ்கள், கேடயங்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் பிரதேச சபை உப தவிசாளர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்திருந்தனர். (க-7)

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 35 ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு





(யாழ்ப்பாணம்)

தமிழக முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.இராமசந்திரனின் 35 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு அமரர்.யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் துணைவியார் இலட்சுமி மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினருமான ராஜேந்திரம் செல்வராஜா உள்ளிட்டோர் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (க-7-33)

# நாயன்மார்க்கட்டு பாரதி வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு பாரதி வீதியை புரொஜெக்ட் திட்டத்தில் புனரமைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டு பல வருடங்களாகியும் இதுவரை புனரமைப்பு வேலைகள் எதுவும் நடைபெறாமையினால் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற வலி.கிழக்கு பிரதேச சபையின் மாதந்த அமர்வில் குறித்த பகுதியின் பிரதேச சபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு உடனடியாக பாரதி வீதியை புனரமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

நாயன்மார்கட்டு பாரதி வீதி புரொஜெக்ட் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அளவீடுகள் அனைத்தும் செய்யப்பட்டு அதற்குரிய ஒப்பந்தமும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செய்யப்பட்டு அதற்குரிய ஒப்பந்தக் கால அறிவித்தல் பலகையும் நாயன்மார்கட்டு சந்திப் பகுதியில் நாட்டப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை எவ்விதமான புனரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கவில்லை இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-7)

# கிளி. போராளிகள் நலன்புரிச் சங்க அங்குரார்ப்பணம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் குறித்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள், முன்னாள் போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-7-100-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 250 |
| தக்காளி | 220 | 300 | 180 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 200 | 160 |
| கோவா | 150 | 140 | 180 | 160 |
| கரட் | 200 | 320 | 350 | 400 |
| பூசணி | 100 | 100 | 100 | 160 |
| புடோல் | 200 | 200 | 180 | 280 |
| வாழைக்காய் | 150 | 140 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 650 | 1000 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 450 | 450 | 700 |
| வெண்டக்காய் | 200 | 160 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 450 | 450 | 400 | 450 |
| லீக்ஸ் | 400 | 300 | 400 | 450 |
| பீற்றூட் | 450 | 350 | 320 | 400 |
| கறிமிளகாய் | 800 | 750 | 650 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 400 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | — | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 200 |
| தேசிக்காய் | 140 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 350 | — | 350 |
| வெங்காயப்பூ | — | 650 | — | — |
| முள்ளங்கி | 250 | 200 | 160 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 40 | 50 | 40 | 50 |
| ஈரப்பலா | 80 | 160 | — | 180 |

# முல்லை. காட்டுப் பகுதியில் சிசு ஒன்றின் எச்சங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐயன்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐயன்கன்குளம் காட்டுப் பகுதியில் நேற்றைய தினம் சிசு ஒன்றின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கால்நடை மேய்ப்பதற்காக சென்ற நபர்கள் வழங்கிய தகவலுக்கமைய குறித்த இடத்திற்கு சென்ற நீதிமன்ற அதிகாரிகள் தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் குறித்த இடத்திலிருந்து சிசுவின் எச்சங்களை மீட்டுள்ளனர். குறித்த பகுதிக்கு வருகை தந்த மாவட்ட பதில் நீதிவான் எச்சங்களை பார்வையிட்டார்

இதே வேளை எச்சங்களை பார்வையிட்ட சுகாதார மருத்துவ உயர் அதிகாரி, குறித்த எச்சங்கள் முதிர்ச்சி பெறாத சிசு ஒன்றின் எச்சங்கள் எனவும் சட்டவிரோத சிசு கருக்கலைப்பு ஒன்றின் மூலம் பிரசவிக்கப்பட்ட சிசுவின் எச்சங்களாக இருக்கலாம் எனவும் தெரிவித்தார்

சம்பவம் தொடர்பில் ஐயன்கன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழப்பு ஏற்பட்டு...

சேர்ந்த எட்டு மாதமான கார்த்திபன் பூஜா என்பவராவார்.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமையும் வயிற்றோட்டம் தொடர்ந்து ஏற்பட்டதால் பிற்பகல் 3.45 மணியளவில் குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி 4.20 மணி அளவில் உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் நேற்று சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் வயிற்றோட்டத்தால் நீரிழப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (4-7,60)

## மதில் இடிந்து...

வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் தும்பளை திடீர் மரண விசாரணை அதிகாரி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார். (4-7,60)

## படுகாயமடைந்த...

வலயத்தில் பணியாற்றும் அரச ஊழியரான யாழ். சாவகச்சேரி - அரசடியை சேர்ந்த ஜீவானந்தம் சுகிர்தினி (வயது 32) என்பவர் உயிரிழந்ததுடன் 17 பேர் காயமடைந்தனர்.

அதில் காயமடைந்த முள்ளிவாய்க்காலைச் சொந்த இடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட ரொட்மன் ரொணிக் ரொபின் (வயது-6) என்ற சிறுவனின் இரு கைகளும் காயமடைந்த நிலையில் ஒரு கை அகற்றப்பட்டிருக்கின்றது. (4-7,33,104)

## கடவுள் எம்முடன்...

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை இன மத நிற மொழி வேறுபாடின்றி உலகம் முழுவதும் கொண்டாடும் இவ்வேளை கிறிஸ்து பிறப்பின் பெருவிழா வாழ்த்துக்களை முதலில் உங்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்றோம்.

வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார் என்ற யோவான் நற்செய்தியாளரின் வார்த்தைகள் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையைத் தெளிவாகத் வெளிப்படுத்துகிறது.

கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையையும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வையும் நம்பிக்கையையும் அர்த்தத்தையும் எமது எந்தத் துன்பமான காலநிலையையும் இக்கட்டான அனுபவம்என்று குறைத்து விடவோ எடுத்து விடவோ முடியாது.

கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையை நாம் சிறப்பாக உணர்ந்து அந்த உண்மையை பகிர்ந்து கொள்ள சிறப்பாக அழைப்பு விடுக்கும் காலம் கிறிஸ்து பிறப்பு விழா காலமாகும்.

இன்றைய இக்கட்டான பொருளாதார நிலையிலும் அன்றாடப் பொருள்களின் தட்டுப்பாடு மத்தியிலும் மின்சாரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலையிலும் கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையை பகிர்ந்து கொள்ளுங்கள். எல்லாரும் இருக்கும் இந்த இக்கட்டான வேளையில் இந்த அன்பின் பகிர்வு கட்டாயமாகப் பணமாக, பொருளாக, உணவாக, ஆடையாக இருக்க வேண்டுமென்பதில்லை.

தேவையில் இருப்போர்க்கு உடலுதவி செய்தல் - துன்பத்தில் இருப்போருக்கு ஆறுதல் தெரிவித்தல் - வைத்தியசாலையில் துன்பப்படுவோரைச் தரிசித்தல் - சிறைச்சாலைகளில் வாடுவோரைச் சந்தித்தல் போன்ற செயல்கள் மூலம் கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையை வெளிப்படுத்துங்கள் எனத் தெரிவித்துள்ளார். (4-7)

## 309 கைதி...

ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

விடுதலை செய்யப்படவுள்ள கைதிகளில் 306 ஆண்களும் 3 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதனிடையே, உறவினர்களை சந்திப்பதற்கு கிறிஸ்தவ மத கைதிகளுக்கு மாத்திரம் இன்று அனுமதி வழங்கப்படவுள்ளது. (4-7)

## சமூகப் பொறுப்...

கொடுத்து விடுதலையின் மகிழ்ச்சியை பறைசாற்றும் ஒரு மகிழ்ச்சியான பண்டிகை இதுவாகும் என நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார நெருக்கடி நிலையில் ஒருவரையொருவர் இரக்கத்துடனும் அன்புடனும் வாழ்த்தி, சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்கு ஆதரவளிப்பதே நாம் இயேசு கிறிஸ்துவுக்குச் செய்யும் கௌரவமாகும்.

"செலவுகளைக்குறைப்போம், எளிமையாக நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவோம், துன்பப்படுபவர்களுக்கு நம்மிடம் எஞ்சியிருப்பதைக் கொடுப்போம்" என்று பாப்பரசர் போப் பிரான்சிஸ், மனிதநேயத்தின் மதிப்பைக் கற்பிக்க அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

மாளிகை வீட்டுக்கும் ஏழைக் குடிசைக்கும் ஒரேவிதமான நத்தார் பண்டிகையின் மகிழ்ச்சியை வழங்குவதே எங்கள் அரசாங்கத்தின் இலக்காகும்.

எனவே அனைவருக்கும் அன்பைப் பரப்பும் மற்றும் மனிதநேயத்தைப் பகிர்ந்து கொள்ளும் குடிமக்களாக இந்த பண்டிகைக் காலத்தில் அனைவரும் தங்கள் சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு உறுதியளிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் அற்புதமான பிறப்பின் மகிமையினால் நம் நாட்டைக் குணப்படுத்தும் வகையில் எதிர்கால தசாப்தத்தின் கதவுகள் திறக்கப்பட வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## தமிழ்க்...

யின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது ஜனாதிபதியுடனான சந்திப்பு, தேர்தல்,ஜெனிவா போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (4-7,33,104)

## வேட்புமனுத்...

தேர்தல்கள் ஆணைக் குழுவில் இடம் பெற்றதுடன், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக, உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனு கோரும் திகதி மற்றும் வேட்புமனுவை ஏற்கும் காலம் தொடர்பான அறிவிப்பு டிசம்பர் கடைசி வாரத்தில் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்திருந்தார்.

இதேவேளை, பிரதித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் நேற்று முன்தினம் காலை கொழும்புக்கு அழைக்கப்பட்டதாகவும், அங்கு அவர்களுக்கு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1434
வெற்றி இலக்கங்கள்
மகரம் 7 5 5 6 9 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.12.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1009
I 05 06 16 24
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
திகதி 2022.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 3221
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
H 03 20 46 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1327
வெற்றி எழுத்து
சுப்பர் இலக்க
வெற்றி இலக்கங்கள்
X 02 18 34 55 62

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 288
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 05 18 22 40 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/24
சீட்டிழுப்பு இலக்கம் 4979
ஆங்கில எழுத்து
வெல்லப்பட்ட இலக்கங்கள்
M 3 4 6 6 0 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1954
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.12.24
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்துக்கள் இலக்கங்கள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 4,619,780/-
J 04 15 55 62
ரூ.500/- பரிசுகளுக்கான 1897
ரூ.100/- பரிசுகளுக்கான 182

சனிக்கிழமை
சனிதா Shanida
சீட்டிழுப்பு திகதி : 2022.12.24
சீட்டிழுப்பு இல : 4115
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 4,628,060/-
வெற்றி இலக்கங்கள்
14 16 46 63
ஆங்கில எழுத்து
B
வெற்றி பெற்ற டிக்கட்டுகள்

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 4,518,434.40
திகதி 2022-12-24
வெற்றி வாரம் 3666
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்
03 25 30 45
தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 9,161,900/-

28 வருடங்கள்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 12 16 19 46 53
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1130
வர்ணம் சிவப்பு
திகதி 2022.12.24 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 288,730,271.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

சம்பத வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 556
திகதி 2022-12-24
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
விதி எண்
R 05 26 55 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 15,395,476/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

சனிக்கிழமை
அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல : 1780
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.12.24
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 4,749,800/-
வெற்றி இலக்கங்கள்
ஆங்கில எழுத்து
13 23 31 60 U

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் வங்கி...

போது அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட எமது நகைகள் குறித்த வாங்கி அதிகாரிகளால் மோசடி செய்யப்பட்டது.

இவ்வாறான நிலையில் எமது நகைகள் தற்போது வரை கிடைக்கப்பெறாத நிலையில் நாம் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டதுடன் பாரிய மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளோம்.

நகை மோசடியுடன் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் சிலர் மீண்டும் வங்கியில் இணைக்கப்பட்டுள்ள நிலையில் எமது நகைகளை மீளத் தராமல் இழுத்தடிப்பு செய்வது ஏன்?

நாம் வாங்கிக்குச் சென்றால் அங்கிருக்கும் முகாமையாளர் ஏதோ புதிய விடயங்களை கேட்பது போல் எமது ஆதங்கங்களை கேட்கிறார் நான் மேல் இடத்துக்கு அறிவிக்கிறேன் என கூறுவதே தொடர் கதையாக உள்ளது.

ஆகவே தொடர்ந்து எம்மை ஏமாற்றலாம் என மக்கள் வங்கி கருதுமானால் வாங்கியின் செயற்பாடுகளை முடக்கி பாரிய போராட்டம் ஒன்றை மேற்கொள்ள தயங்க மாட்டோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(4.7.104)

## இறக்குமதி செய்யப்படும் பொருளுக்கு பதிலாக உள்நாட்டில் உற்பத்தி

(கொழும்பு)

இறக்குமதி கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது குறித்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதுவரை 795 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தடை செய்யப்பட்ட பொருட்களுக்கு பதிலாக இந்நாட்டில் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(4-7)

## அதிக பனி மூட்டம் இயல்பு நிலை பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் தொடர் பனிமூட்டம் காரணமாக வாகனப் போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அங்கு கடும் குளிர் காணப்படுவதுடன், இடையிடையே மழை பெய்தும் வருகிறது.

இதனால் போக்குவரத்து செய்வதில் சிரமங்கள் காணப்படுவதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4.7)

### மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள் தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப் பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே இல.

(C-5571)

**077 706 7698**

### வீடு வாடகைக்கு

இல.351/1, கோவில் வீதி, நல்லூர் (துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகில்) உள்ள வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. வாடகை 25,000 ரூபாய், அட்வான்ஸ் 300,000 ரூபாய்
வேலை/ உயர்கல்விக்காக யாழ். நகருக்கு அண்மையில் வசிக்க விரும்பும் சிறிய குடும்பம் எதிர்பார்க்கப்படுகிறது.

(13897)

**074 043 6225**

### வீடு வாடகைக்கு

பருத்தித்துறை, கிராமக்கோட்டிக்கு அண்மித்ததாக திகிரி water Board இற்கு அருகாமையில் 5 அறைகள், பெரிய Hall, pipe borne water, நவீன மலசலகூடம், Water board மற்றும் Tube Well Water, 3-4 car park வசதிகளுடன் வீடு ஒன்று வாடகைக்கு உள்ளது. அலுவலக பாவனைக்கு உகந்தது. அல்லது அரசாங்க, தனியார், வங்கி மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வருடாந்த வாடகைக்கு விடப்படும்.

(13903)

**077 725 2702**

### வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

1 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில் (நீராவியடி பிள்ளையார் ஆலய முன் வீதி, 500m தூரத்தில் வேம்படி சித்தி விநாயகர் ஆலயம் அண்மையாக) 2 பரப்பு காணியில் சுற்று மதில், கட்டுக் கிணறு, 3 அறையுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு (13898)

**075 369 4241**

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரப் பகுதியில் A9 வீதியில் இருந்து 30 மீற்றர் தூரத்தில் ஸ்ரேசன் வீதியில் இலங்கை வங்கிக்கு மேற்கு புறமாக நல்ல தண்ணீர் கிணற்றுடன் சுற்றி வர மதிலுடன் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. கடைகள், வீடுகள், தனியார் வைத்தியசாலைகள், மண்டபம் கட்ட உகந்த இடம். தரகர்கள் தேவையில்லை.

(13866)

**076 005 2296, 077 670 1521**
**077 416 2296**

### புதிய வீடு வாடகைக்கு

யாழ். கலைப்(Art) பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் 2 நிமிட நடை தூரத்தில் குமாரசுவாமி வீதியில் 2 மாடி வீடுகள் வாடகைக்கு உண்டு.
Ground floor house, First floor house
(3 bedroom, 2 bathrooms, Hall, Kitchen, 2 car parking
Seperate entrance)

(13901)

**077 770 8125, 074 175 8267**
**+16478220973 (whatsapp)**

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Accounts Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(13875)

**071 862 3056**
**077 287 3312**

### பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

(C-5657)

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -30,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -45,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

### சமையல் வேலை

யாழ்ப்பாணத்தில் சமையல் வேலைக்கு தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய ஆட்கள் தேவை.



சம்பளம் 30,000/-

(C-5657)

தங்குமிடம்
3 நேரம் சாப்பாடு வழங்கப்படும்
(பெண்கள் விரும்பத்தக்கது)
40 வயதுக்கு உட்பட்டவர்கள்

CIMS COLLEGE 0767093368

## Machine for sale



Heidelberg offset Machine for Sale imported as it is condition
kord Red Button Grey 3 nos
kord yellow Button Grey 3 nos
Heidelberg cylinder die cutting Machine 2 nos
FL Auto paper cutter 2 nos
for inspection, please Contact

(13896)

**077 577 1343, 077 7[illegible] 038**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13902)

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

**077 986 5457, 077 814 7389**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.